இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 186 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 04 – வெள்ளிக்கிழமை 16 பிப்ரவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 186 : Thiruvalluvar Year - 2055 - Maasi 04 - Friday 16 February 2024 - Madurai 12 Pages ₹ 5.00







## ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கைகளையும் கேட்டு நிறைவேற்றி – தமிழ்நாட்டு மக்களின்

# இல்லம்தோறும் உதவிடும் திராவிட மாடல் ஆட்சி!

## சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து – அடுக்கடுக்கான சாதனைகளைச் சுட்டிக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, பிப்.16-**

**சட்டப்பேரவையில் நேற்று ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கைகளையும்கேட்டு நிறைவேற்றி, தமிழ்நாட்டு மக்களின் இல்லம் தோறும் உதவிடும் திராவிட மாடல் ஆட்சியை நடத்துகிறோம் என அடுக்கடுக்கான பல சாதனைகளைச் சுட்டிக்காட்டி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் ஊனோடும் உயிரோடும் கலந்துவிட்ட அன்னைத் தமிழ்மொழிக்கு இனிய வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி) பார்போற்றும் வகையில் மூவேந்தர் கொடிகட்டி ஆண்ட தமிழ்நாட்டுக்குக் கம்பீர வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி) இறுதிமூச்சு இருக்கும்வரை சுயமரியாதைச் சுடரொளியாகச் சுற்றிச்சுழன்ற பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்குத் திராவிட வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

இனம் காக்க, 75 ஆண்டுகளுக்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் பேரியக்கத்தை உருவாக்கிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவுக்கு அன்பான வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

ஐம்பது ஆண்டு காலம் இயக்கத்தை நடத்தி, ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து, நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி; எங்களை எல்லாம் உருவாக்கிய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்குக் கனிவான வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

### வடக்கிற்கும் சேர்த்து வாரி வழங்குகிறது தமிழ்நாடு!

தமிழும், தமிழ்நாடும், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும்தான் எங்களை எந்நாளும் இயக்கிக் கொண்டிருக்கும் இயங்கு சக்திகள்! ஐந்தும் நம்மை இயக்கிக் கொண்டிருப்பதால்தான், உற்சாகமாக உயர்ந்து கொண்டு இருக்கிறோம். இந்தியாவில் தலைசிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் அடைய, இந்த உன்னத தலைவர்கள் போட்டுத் தந்த வழித்தடம்தான் அதற்குக் காரணம்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2024–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றினார்.

திராவிட மாடல் வழித்தடத்தில் நாம் இயங்கிக் கொண்டிருப்பதால்தான், தமிழ்நாட்டின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியவில்லை; தடுக்கவும் முடியாது! (மேசையைத் தட்டும் ஒலி) "ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவனை மறைக்க முடியாது."

ஒரு காலத்தில் 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது' என்று நாமே முழங்கினோம். இன்று, "தெற்கு வளர்கிறது; வடக்கிற்கும் சேர்த்து தெற்கு வாரி வழங்குகிறது" என்ற அளவுக்கு நாம் வளர்ந்துள்ளோம். இத்தகைய தகுதியும் பெருமையும் தமிழ்நாட்டிற்கு எதனால் சாத்தியமானது? திராவிட இயக்கத்தால்தான்.

ஆட்சி என்பது வெறும் அதிகாரம் அல்ல; கொள்கையைச் செயல்படுத்தும் 'களம்' என்று மாற்றிக் காட்டியவர்கள்தான் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும்! (மேசையைத் தட்டும் ஒலி)

### தமிழ்நாட்டு மக்களுக்காக நாளும் சிந்தித்துச் செயல்பட்டு வருகிறேன்!

'இன்னார்க்கு மட்டுமே இன்னது' என்பதை மாற்றி 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கருத்தியலை அரசியல் களத்தில் விதைத்தார் தந்தை பெரியார்! அதனை ஆட்சி நிர்வாகத்தில் செயல்படுத்தியவர்கள் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும். அதே கோட்பாட்டை இன்றைய நவீன காலச் சிந்தனைகளுடன் இணைத்து, 'திராவிட மாடல்' ஆட்சியை உங்கள் அனைவரது பேராதரவுடன் நான் நடத்தி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### தமிழ்நாட்டு மக்களை அவமதித்த ஆளுநர்!

**ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரையாற்றுவது என்பது சட்டமன்ற மரபு. அரசின் கொள்கை அறிக்கையாக அமைச்சரவை தயாரித்துத் தருவதை அப்படியே இந்த மன்றத்தில் வாசிக்க வேண்டியது ஆளுநரின் கடமை. ஆனால், ஆளுநர் அவர்கள் தனது அரசியல் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இம்மாமன்றத்தையும் பயன்படுத்திக் கொண்டாரோ! என்று கருதும் வகையில் நடந்து கொண்டார். இது, எங்களை அல்ல; நூற்றாண்டுப் பாரம்பரியம் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தையே அவமானப்படுத்தும் செயல் அல்லவா? கோடிக் கணக்கான தமிழ்நாட்டு மக்களை அலட்சியப்படுத்தும் காரியமல்லவா? மக்களாட்சி மாண்புக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரசியல் சட்டத்தை மீறி, தான் ஏற்றுக்கொண்ட பதவிப்பிரமாணத்துக்கு மாறாக செயல்படுவது அல்லவா?**

நான் என்றால், தனிப்பட்ட நான் அல்ல; அப்படி எப்போதும் நான் கருதியது இல்லை. "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்" எனும் நான் என்று நான் பொறுப்பேற்கும்போது, அந்தச் சொல்லை உச்சரித்த அடியேன் நான் தான். உச்சரிக்க வைத்தவர்கள், கோடிக்கணக்கான உடன்பிறப்புகளையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டு மக்கள். அந்தத் தமிழ்நாட்டு மக்களுக்காகவே ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் சிந்தித்துச் செயல்பட்டு வருகிறேன். என் மனச்சாட்சிப்படி நான் செயல்பட்டு வருகிறேன். எடுத்துக்கொண்ட பதவிப் பிரமாண உறுதிமொழிக்கு உண்மையாக நான் ஆட்சி செய்து வருகிறேன்.

இன்னும் சொன்னால், தந்தை பெரியாரின் வாரிசாக, பேரறிஞர் அண்ணாவின் வாரிசாக இருப்பவர் எப்படிச் செயல்பட வேண்டுமோ, அப்படிச் செயல்பட்டு வருகிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் இன்று இருந்து, ஆட்சி செய்திருந்தால் எப்படி இருக்குமோ, அப்படி நான் ஆட்சி நடத்தி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் கலைஞருக்கும் பெருமை; அவர் மகனான இந்த ஸ்டாலினுக்கும் பெருமை என்பதை உணர்ந்தவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி)

14 வயதில் தமிழ்க் கொடி ஏந்தி, 95 வயது வரையிலும் அதனை உயர்த்திப் பிடித்திருந்த தமிழினத் தலைவர் கலைஞருக்கு இது நூற்றாண்டு விழா கொண்டாடும் ஆண்டு. இந்த ஆண்டில், அவரது உயிரினும் மேலான இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிறது என்பது தான் எனக்குக் கிடைத்த பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

### பெருமைமிகு கலைஞரின் நூற்றாண்டில் வியப்புமிகு திராவிட மாடல் ஆட்சி!

பெருமைமிகு கலைஞரின் நூற்றாண்டில், வியப்புமிகு திராவிட மாடல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிற சிறப்புமிகு தகுதியால், மகிழ்ச்சிமிகு மனநிலையில் இந்த மாமன்றத்தில் நான் கம்பீரமாக நின்றுகொண்டு இருக்கிறேன். இத்தகைய நெகிழ்ச்சிமிகு ஆண்டின் தொடக்கத்தில், கடந்த 12–ஆம் நாளன்று ஆளுநர் உரையுடன் 2024–2025ஆம் ஆண்டுக்கான பேரவை நடவடிக்கைகள் தொடங்கி இருக்க வேண்டும்.

ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரையாற்றுவது என்பது சட்டமன்ற மரபு. அரசின் கொள்கை அறிக்கையாக அமைச்சரவை தயாரித்துத் தருவதை அப்படியே இந்த மன்றத்தில் வாசிக்க வேண்டியது ஆளுநரின் கடமை. ஆனால், ஆளுநர் அவர்கள் தனது அரசியல் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே இம்மாமன்றத்தையும் பயன்படுத்திக் கொண்டாரோ! என்று கருதும் வகையில் நடந்து கொண்டார்.

இது, எங்களை அல்ல; நூற்றாண்டுப் பாரம்பரியம் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தையே அவமானப்படுத்தும் செயல் அல்லவா? கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்களை அலட்சியப்படுத்தும் காரியமல்லவா? மக்களாட்சி மாண்புக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரசியல் சட்டத்தை மீறி, தான் ஏற்றுக்கொண்ட பதவிப்பிரமாணத்துக்கு மாறாக செயல்படுவது அல்லவா?

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## 23ம் தேதி சென்னை வருகிறார் தலைமைத் தேர்தல் ஆணையர்

# நாடாளுமன்றத் தேர்தல் ஆயத்தப் பணிகள் குறித்து ஆலோசனை!

புதுடெல்லி, பிப்.16-

நாடாளுமன்ற தேர்தல் ஆயத்த பணிகள் குறித்து ஆலோசனை நடத்த தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் வரும் 23ஆம் தேதி சென்னைக்கு வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒன்றிய பா.ஜ.க., அரசின் பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில், வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று தெரிகிறது. தேர்தலுக்கான தேதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என கூறப்படுகிறது. இந்நிலையில், தேர்தல் ஆயத்த பணிகள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையம் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது. தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார், மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் அவ்வபோது ஆலோசனை நடத்தி வருகிறார். காணொலி மூலமும் ஆலோசனை கூட்டங்கள் நடைபெற்றன. இந்நிலையில், ஒவ்வொரு மாநிலமாக நேரில் சென்று தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த தலைமைத் தேர்தல் ஆணையர் முடிவு செய்துள்ளார். அதன்படி, வரும் 23 ஆம் தேதி தமிழ்நாடு வரும் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் அன்றைய தினமும், அதற்கடுத்த நாளான 24ஆம் தேதியும் நாடாளுமன்றத் தேர்தல் ஆயத்த பணிகள் குறித்து தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார். கேரள தலைமைத் தேர்தல் அதிகாரியும் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார். இதே போல், காவல்துறை மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அரசு அதிகாரிகளுடனும் தலைமைத் தேர்தல் ஆணையர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

---

## பா.ஜ.க. அரசு கொண்டு வந்த

# தேர்தல் பத்திர நடைமுறை ரத்து - உச்சநீதிமன்றம் அதிரடி!

புதுடெல்லி, பிப். 16-

ஒன்றிய அரசு கொண்டு வந்த தேர்தல் பத்திர திட்டத்தை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் பத்திர நடைமுறை அரசியல் சாசனத்திற்கு எதிரானது, தேர்தல் பத்திரங்கள் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை, தேர்தல் பத்திரங்கள் ஆதாயங்களுக்கு வழிவகுக்கும் தேர்தல் பத்திர நடைமுறை திட்டம் அரசியலமைப்புக்கும், தகவல் அறியும் உரிமைக்கும் எதிரானது. தேர்தல் பத்திரங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது. எந்த கட்சி, யாரிடமிருந்து தேர்தல் பத்திரங்களை பெறுகிறது என்பதை தெரிந்துகொள்ள நாட்டு மக்களுக்கு உரிமை உள்ளது.

நன்கொடை தருவோர் குறித்த விவரங்களை தெரிவிக்கத் தேவையில்லை என்பது வாக்காளர்களின் உரிமைகளை பறிப்பதாக உள்ளது. தேர்தல் பத்திர நன்கொடைக்காக கம்பெனிகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டது சட்ட விரோதம். தேர்தல் பத்திரங்கள் திட்டம், அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது.

தேர்தல் பத்திரங்களை அறிமுகம் செய்ய மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் ஐ.டி. சட்டத்தில் மேற்கொண்ட திருத்தங்கள் ரத்து தேர்தல் பத்திரங்கள் திட்டம் செல்லாது என உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு அதிரடி தீர்ப்பு அளித்துள்ளது. தேர்தல் பத்திரங்கள் வாங்கியவர்கள் குறித்த முழு விவரத்தையும் SBI தேர்தல் ஆணையத்தில் ஒப்படைக்க வேண்டும். தேர்தல் ஆணையம் அந்த விவரங்களை தேர்தல் ஆணைய இணைய தளத்தில் வெளியிட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் மூலம் வாங்கிய நிதியை, அவர்களிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. தலைமை நீதிபதி தலைமையிலான ஐந்து பேர் கொண்ட அமர்வு ஒருமித்த உத்தரவை வழங்கியுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 16-02-2024

# ஆணியை விதைப்பவர்

சில நாட்களுக்கு முன் மாநிலங்கள் அவையில் பிரதமர் மோடி அவர்கள் பேசிய பேச்சை நினைவுபடுத்திப் பாருங்கள்…

“எங்களைப் பொறுத்தவரையில் நாடு என்பது வெறும் நிலமல்ல. அது மனித உடலைப் போன்றது. காலில் முள் குத்தி வலி ஏற்பட்டால் அந்த முள்ளை கை உடனே எடுக்கும். ‘காலில்தானே முள் இருக்கிறது. எனக்குக் கவலையில்லை’ என கை நினைக்காது. அதுபோலவே நமது தேசமும்” என்று சொல்லி இருந்தார் பிரதமர்.

அவர்தான் இன்று முள் அல்ல, ஆணியை விதைத்துக் கொண்டு இருக்கிறார். தலைநகர் டெல்லியின் சாலைகள் தோண்டப் பட்டு, அங்கு ஆணிகள் நட்டு வைக்கப்படுகின்றன. ‘காலில் முள் குத்தினால் கை எடுக்கும்’ என்று சொன்ன பிரதமரின் கரங்கள்தான் ஆணியை நடுகின்றன.

யார் காலில் குத்தட்டும் என்று நடுகின்றன? நிலத்தில் பயிர் விளை வித்து பசிப்பிணி போக்கும் மருத்துவர்களாம் வேளாண் விவசாயப் பெருங்குடி மக்கள் காலில், அவர்கள் வரும் வாகனத்தில் குத்தட்டும் என்று ஆணிகள் நடப்படுகின்றன.

டெல்லியை நோக்கி அணிவகுத்துக் கொண்டிருக்கிறார்கள் விவசா யிகள். விவசாயிகளிடம் இருந்து நிலத்தைப் பறிக்கும் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஒன்றரை ஆண்டுகள் போராடி அந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெற வைத்த விவசாயிகள்தான் இவர்கள். ‘வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயித்து அதனைச் சட்டப்பூர்வமாக ஆக்க வேண்டும்’ என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் வைத்துள்ளார்கள்.

“நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்கிக் காட்டுவோம்” என்பது, பிரதமர் ஆவதற்கு முன்னால் மோடி கொடுத்த முக்கியமான வாக்குறுதி ஆகும். ‘இரண்டு மடங்கு வருமானத்தைக் கேட்கவில்லை. குறைந்தபட்ச ஆதார விலை யைத்தான் கேட்கிறோம்’ என்கிறார்கள் விவசாயிகள். சம்யுக்த கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோச்சா ஆகிய இரண்டு அரசியல் சார்பற்ற விவசாய அமைப்புகள்தான் டெல்லியை நோக்கி அணிவகுத்துள்ளன.

**டெல்லியின் ஒன்றிய பா.ஜ.க.வின் போலீஸ் கொடுத்த வரவேற்புதான் ஆணிப் படுக்கைகள் ஆகும். டெல்லிக்குள் அவர்கள் வரமுடியாதபடி தடுப் புகள் போடப்பட்டுள்ளன. சாதாரணத் தடுப்புகள் அல்ல. இரும்புத் தடுப்பு கள், சிமெண்ட் தடுப்புகள் போடப்பட்டுள்ளன. சிமெண்ட் சுவரையே சாலை யில் கட்டி விட்டார்கள். சாலைகளைப் பெயர்த்து, ஆணிகளைப் பதித்து விட்டார்கள். அரியானாவில் இருந்து டெல்லிக்குள், பஞ்சாப்பில் இருந்து டெல்லிக்குள் வரும் அனைத்துச் சாலைகளும் அடைக்கப்பட்டு விட்டன. மீறி உள்ளே வரும் விவசாயிகள் மீது கண்ணீர்ப் புகை வீசப்பட்டுக் கொண்டே இருக்கிறது. புகைக் குண்டுகளில் இருந்து பாதுகாக்க ஈரமான சாக்குப் பைகளை கைகளில் வைத்துள்ளார்கள் விவசாயிகள்.**

**விவசாயிகள் மீது ட்ரோன் மூலம் கண்ணீர்ப் புகை வீசும் கொடுமையும் நடக்கிறது.**

**விவசாயிகளுக்கு டீசல் கொடுக்கக் கூடாது என்று அனைத்து பெட்ரோல் பங்குகளும் மிரட்டப்படுகின்றன. விவசாயிகள் மீதான தாக்குதல் காட்சிகளைக் காட்டக் கூடாது என்று சமூக வலைத்தளங்கள் முடக்கப்படுகின்றன.**

**அரியானா காகர் ஆற்றின் பாலத்தை மூடிவிட்டார்கள். ஆறு வறண்டு கிடக்கிறது. வறண்ட பகுதியில் விவசாயிகளின் டிராக்டர் போய்விடக் கூடாது என்பதற்காக ஜே.சி.பி.மூலம் மண்ணைத் தோண்டிப் போட்டுள் ளது அரசு.**

“குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்க அவசர கதியில் சட்டம் இயற்ற முடியாது” என்கிறார் ஒன்றிய வேளாண் துறை அமைச் சர் அர்ஜுன் முண்டா. ஏன் இவர்கள் அவசர கதியில் எதையுமே செய்தது இல்லையா?

பொருளாதாரத்தில் நலிவடைந்த உயர் ஜாதியினருக்கு கல்வி நிறுவ னங்களிலும், அரசு அலுவலகங்களிலும் 10 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கும் நோக்கத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 103 ஆவது திருத்தத்தை 2019 ஆம் ஆண்டு பா.ஜ.க. அரசு இயற்றி யது. இரு அவைகளிலும் வைத்து நிறைவேற்றி, குடியரசுத் தலைவ ரின் ஒப்புதலைப் பெற்று, அரசிதழில் வெளியிட்டது அனைத்தும் ஒரு சில நாட்களுக்குள் நடந்து முடிந்தன. அவசர அவசரமாக 5 நாள்களில் 103 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், அடுத்த 5 நாள்களில் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றார்கள். அது எல்லாம் எப்படி சாத்தியம் ஆனது? விவசாயிகளுக்கு மட்டும் இப்போது சாத்தியம் இல்லாமல் போகிறது.

இன்னொன்றையும் சொல்லி இருக்கிறார் ஒன்றிய அமைச்சர். ‘மாநில அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமாம்’. இதைக் கேட்கும் போது சிரிப்புதான் வருகிறது. இதுவரை இவர்கள் மாநில அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித்தான் சட்டங்கள் கொண்டு வந்தார்களா? மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்தார் களே, அப்போது மாநில அரசுகளிடம் கேட்டார்களா? ஒன்றரை ஆண்டு காலம் இந்த மூன்று சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் டெல்லியில் போராட்டம் நடத்தியபோதாவது, மாநில அரசுகளிடம் கருத்துக் கேட்டு, பின் வாங்குவதற்கான முயற்சியை எடுத்ததா ஒன்றிய அரசு? இனி வேறு வழியில்லை என்ற சூழலில் அந்த மூன்று சட்டங்களை யும் நிறுத்தி வைப்பதாக அறிவித்தார்களே, அப்போதாவது மாநில அரசு களிடம் கருத்துக் கேட்கப்பட்டதா?

**இதுவரை எதற்காவது மாநில அரசுகளிடம் கருத்துக் கேட்டுள்ளதா ஒன்றிய அரசு? மாநிலப் பட்டியலில் இருக்கிற பகுதிகளுக்கும் சேர்த்து தன்னிச்சையாக சட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் பா.ஜ.க. அரசு, இப்போது ‘மாநில அரசுகளிடம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்’ என்று சொல்வது பசப்பு வார்த்தைகள் அல்லவா?**

சில நாட்களுக்கு முன்னால் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமி நாதனுக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்கியது பா.ஜ.க. அரசு. அவர் தான், ‘குறைந்த பட்ச ஆதார விலையை விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும்’ என்று அறிக்கை கொடுத்தவர். ஆனால் விவசாயிகளுக்கு ஆணிப் படுக்கைகளையே பா.ஜ.க. அரசு தருகிறது? இதை விட போலித்தனம் இருக்க முடியுமா?

●●

## தமிழ்நாட்டில்
## 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம்!

சென்னை,பிப்.16–

தமிழ்நாட்டில் 8 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழக அரசு நிர்வாக காரணங்களுக்காக அவ்வப்போது துறை வாரியாக அதிரடி மாற்றங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், அரசுத்துறைகளில் பணியாற்றும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் அவ்வப்போது பணியிட மாற்றம் செய்யப்படுவது வழக்கமான ஒன்றுதான். அந்த வகையில், தமிழ்நாடு முழுவதும் 6 மாவட்ட ஆட்சியர் உள்பட 14 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இந்த நிலையில், தற்போது 8 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள உத்தரவில், ‘மாநில மனித உரிமைகள் ஆணைய செயலாளராக ஏ.சுகந்தி ஐ.ஏ.எஸ். நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை மற்றும் உள்துறை இணைச் செயலாளராக எஸ்.பி.அம்ரித் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேலும், வணிகவரித்துறை இணை ஆணையராக (நிர்வாகம்) பி.ரத்தினசாமி ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று இணை மேலாண் இயக்குநராக ஆனந்த் மோகன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையராக நிஷாந்த் கிருஷ்ணா ஐ.ஏ.எஸ். நியமிக்கப்பட்டுள்ளார். திருச்சி மாநகராட்சி ஆணையராக வி.சரவணன் ஐ.ஏ.எஸ். நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை பெருநகர மாநகராட்சி கூடுதல் ஆணையராக (சுகாதாரம்) வி.ஜெயச்சந்திர பானு ரெட்டி நியமிக்கப்பட்டுள்ளார். ராமநாதபுரம் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மற்றும் திட்ட அதிகாரியாக வீர்பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




தி.மு.க. இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பொறுப்பேற்றது முதல் அவர்கள் மேற்கொண்ட கழகப் பணிகளை ஆய்வு செய்கின்ற விதமாக இளைஞர் அணியின் மண்டலம் 1–க்கு உட்பட்ட மாவட்ட – மாநில அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் நேரில் சந்தித்து. ‘நீட் விலக்கு நம் இலக்கு’, இல்லந்தோறும் இளைஞர் அணி – மாநில மாநாடு – மழை வெள்ள நிவாரணப் பணிகள் ஆகியவற்றை தனித்தனியாக கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

## தமிழ்நாட்டில் 2026 ஆம் ஆண்டுக்குள் - தரைமட்டப் பாலங்களை எல்லாம்
# மேல்மட்டப் பாலங்களாக மாற்ற - கழக அரசு முனைப்பான நடவடிக்கை!
### சட்டப்பேரவையில் - அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

**சென்னை, பிப்.16– சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :**

**ரூபி ஆர்.மனோகரன்:** நாங்குநேரி திசையன்விளை மாநில நெடுஞ்சாலை இரயில்வே கேட் பகுதியில் இரயில் வரும்போது கேட் மூடப்படுவதால், நீண்ட தூரத்திற்கு வாகனங்கள் வரிசையாக நிற்பதன் காரணமாக பெரிய traffic ஏற்படுகின்றது. அந்தப் பகுதியிலே மேம்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** சட்டமன்ற உறுப்பினர் இரயில்வே மேம்பாலம் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பொறுத்தவரை, போக்குவரத்தின் அடிப்படையில்தான் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன. போதுமான அளவுக்கு, கணிசமான போக்குவரத்து இருக்குமேயானால், அதிலே முழுமையாக, பாதி அதாவது, 50 சதவிகிதம் மாநில அரசு நிதியிலிருந்தும், 50 சதவிகிதம் ஒன்றிய அரசு நிதியிலிருந்தும் பெற்று, பாலங்களை நாங்கள் அமைக்கிறோம். அங்கு போதுமான அளவுக்கு போக்குவரத்து செறிவு



இல்லையென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியை மையமாக வைத்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்துபேசி - ஏனென்றால், போக்குவரத்துச் செறிவு இல்லையென்றால், மாநில அரசாங்கத்தால் 100 சதவிகிதம் நிதி ஒதுக்கி கட்டப்பட வேண்டும். அதனால், உறுப்பினர் அவர்கள் ஒரு கடிதம் கொடுங்கள். அதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்துபேசி, போக்குவரத்து செறிவின் அடிப்படையில், ஒன்றிய அரசாங்கத்தை கலந்து பேசி கட்டுவதா அல்லது மாநில அரசாங்கமே கட்டுவதா என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**நயினார் நாகேந்திரன்:** ஏற்கெனவே திருநெல்வேலி புறவழிச்சாலைக்கு 90 கோடி ரூபாய் ஒதுக்கி தொடக்கப் பணிகள் நடந்து வந்து கொண்டிருக்கிறது. அதையும் இப்பொழுது traffic எல்லா இடங்களிலுமே திருநெல்வேலி ஊருக்குள் போகவே முடியவில்லை. கனரக வாகனங்கள் எல்லாம் வந்து விட்டன. அதனால் வெகுவிரைவாக அந்த மீதி இருக்கிற அந்தப் பணங்களையும் ஒதுக்கி, சுற்றுப்புற புறவழிச்சாலையை உடனடியாக செய்துதர வேண்டும். ஏற்கெனவே நீங்கள் ஆணையிட்டதற்கும், செய்து தந்தமைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, வடகரை கங்கைகொண்டான் பாலம் தெற்குப்பட்டி பாலத்தையும் உடனடியாக நிதி ஒதுக்கி செய்துதர வேண்டும்.

**அமைச்சர் எ.வ.வேலு:** நம்முடைய திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் இந்த தரைப் பாலத்தைப் பற்றி குறிப்பிட்டார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற உடனே தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை தரைப் பாலங்களையும் மேல்மட்டப் பாலங்களாக அமைக்கவேண்டும் என்ற அடிப்படையிலே மூன்று கட்டமாக அதைப் பிரித்து எடுத்துக்கொண்டு, முதல் கட்டம்முடித்துவிட்டோம். இரண்டாம் கட்டம் முடித்துவிட்டோம். இப்போது மூன்றாம் கட்டமாக 2026 ஆம் ஆண்டிற்கு முன் இவைகளெல்லாம் ஒட்டுமொத்தமாக பாலங்கள் கட்டவேண்டுமென்ற நிலையில்தான் நெடுஞ்சாலைத் துறை மிக வேகமாகப் பணிகள் ஆற்றிக் கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற அந்த இரண்டு ஊர் தரைமட்டப் பாலங்கள் இந்தப் பட்டியலில் இருக்கிறதா என்பதை நாளைக்கே நான் பார்த்துக்கொள்கிறேன். இல்லையென்றால் 2026 ஆம் ஆண்டிற்குள் கட்டாயமாக அந்த தரைமட்டப் பாலம் எல்லாம் உயர் மட்டப் பாலமாக ஆக்கப்படும். இரண்டாவதாக திருநெல்வேலி புறவழிச்சாலை நீண்ட நாள் கோரிக்கை.

யாராக இருந்தாலும் குற்றாலத்திற்கு போக வேண்டுமென்றால், அந்த வழியாகத்தான் போக வேண்டும். திருநெல்வேலியில் உள்ளேநுழைந்துதான் போகவேண்டும். ரொம்ப குறுகலான பாதை. ரொம்ப சிரமங்கள் உண்டு. அதை அறிந்த காரணத்தினால்தான் முதலமைச்சர் அவர்கள், புறவழிச்சாலைக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்ற நிலையிலே, நில எடுப்பில் நீண்டநாட்கள் காலதாமதம் இருந்தது. எங்களுக்கு எப்படி சாலை அமைப்பது என்பதே பெரிய பிரச்சினையாக இருந்தது. பல தனியார் எல்லாம் இடம் கொடுக்க முடியாத நிலையில் இருந்தது. இப்போது அதையெல்லாம் அறிந்து முறையாக திட்டமதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிலங்கள் கையகப்படுத்திக் கொண்டி ருக்கிறோம். அதுகூட மூன்று கட்டங்களாக ஒப்பந்தம் கோரப்பட்டு சாலைகள் அமைக்கலாம் என்று அரசின் சார்பாக முடிவு எடுத்திருக்கிறோம். அதனால் விரைந்து அந்த புறவழிச்சாலை நிறைவடைவதற்கு அனைத்து பணிகளுக்கும் நெடுஞ்சாலைத் துறை முன்னுரிமை அளிக்கும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## அரசியல் கட்சிகளுக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் அளித்த தேர்தல் நிதியில்
# பா.ஜ.க.வுக்கு 90 சதவிகிதம் நிதி சென்றதாக அதிர்ச்சித் தகவல்!

புதுடெல்லி, பிப். 16-

2022-23 நிதியாண்டில் அரசியல் கட்சிகளுக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தம் 680 கோடியே 49 லட்சம் ரூபாயை தேர்தல் நன்கொடையாக வழங்கியுள்ளன. இதில் 90 சதவீதம் நிதி, அதாவது 612 கோடி ரூபாய் நன்கொடை பா.ஜ.க. வுக்கு சென்றுள்ளது தற்போது தெரியவந்துள்ளது. 2022-23ல் அரசியல் கட்சிகளுக்கு கிடைத்த நன்கொடைகளில் 80.1 சதவீதம் கார்ப்பரேட் நிறுவனங்கள் வழங்கியவை ஆகும். பா.ஜ.க.வை தவிர எஞ்சிய அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் சேர்த்து கார்ப்பரேட் நிறுவனங்கள் அளித்த நன்கொடை வெறும் ரூ.70 கோடி மட்டுமே ஆகும். ஆனால் மற்ற கட்சிகளை காட்டிலும் பா.ஜ.க.வுக்கு கிடைத்த கார்ப்பரேட் நிறுவனங்களின் நன்கொடை 8 மடங்கு அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழை மக்களை மறந்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு, மக்களின் வரிப்பணத்தில் இருந்து அவர்களுக்கு ஏராளமான சலுகைகளை வாரி வழங்குவதால் பா.ஜ.க.வுக்கு இவ்வளவு பெரியத் தொகை தேர்தல் நிதியாக கார்ப்பரேட்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றிருப்பதாக பல்வேறு தரப்பினரும் விமர்சித்துள்ளனர். தேர்தல் நன்கொடையாக பா.ஜ.க.வுக்கு ரூ.612 கோடி கார்ப்பரேட் நிதி. 2022-23 நிதியாண்டில் அரசியல் கட்சிகளுக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தம் ரூ.680 கோடி தேர்தல் நன்கொடை இதில் 90% நிதி, அதாவது ரூ.612 கோடி நன்கொடை பா.ஜ.க.வுக்கு சென்றுள்ளது அம்பலமாகியுள்ளது.

2022-23ல் அரசியல் கட்சிகளுக்கு கிடைத்த நன்கொடைகளில் 80.1% கார்ப்பரேட் நிறுவனங்கள் வழங்கியவை பா.ஜ.க.வை தவிர எஞ்சிய அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் சேர்த்து கார்ப்பரேட் நிறுவனங்கள் அளித்த நன்கொடை வெறும் ரூ.70 கோடி மற்ற கட்சிகளை காட்டிலும் பா.ஜ.க.வுக்கு கிடைத்த கார்ப்பரேட் நிறுவனங்களின் நன்கொடை 8 மடங்கு அதிகமாகும்.

## உரிமையியல் நீதிபதியாகத் தேர்வு -
# பழங்குடி இனத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதிக்கு வாழ்த்துக்கள்!
### சட்டப் பேரவையில் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாராட்டு!

**சென்னை, பிப். 16 - சட்டப் பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, உரிமையியல் நீதிபதியாகத் தேர்வாகியுள்ள பழங்குடி இனத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதிக்கு தமது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

**மேலும் அவர் பதிலளிக்கையில், “திருமங்கலத்தில் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி விரைவில் தொடங்கும்” என அறிவித்தார்.**

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆர்.பி. உதயகுமார்:** திருமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** கல்விக்கு முக்கியத்துவம், தாய்மொழிக்கு முக்கியத்துவம், தமிழ்மொழியில் கல்வி பயின்று இன்றைக்கு முதன்முறையாக ஒரு பழங்குடி இனத்தைச் சார்ந்திருக்கின்ற திருமதி ஸ்ரீபதி என்பவர் உரிமையியல் நீதிபதியாக தேர்வு பெற்றிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லும் போது அதற்கான அரசாணையாக தமிழ்மொழியில் படிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்கின்ற அந்த அரசாணையை விதைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வளர்த்தவர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். முதலமைச்சருடைய இந்த அரசாணைமூலமாக ஐவ்வாது மலையே இன்றைக்கு சமூக நீதி வாசம் வீசிக் கொண்டிருக்கின்றது என்



பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்வேன். கட்டமைப்பு என்று வரும்பொழுது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு நூலகத்தை எழுப்பியதன்மூலம், அதில் தன்னுடைய இரு விழிகளை யும் இழந்த சகோதரர் ஸ்ரீகாந்த் என்பவர் போட்டித்தேர்விலே பங்குபெற்று இன்றைக்கு அவரும் தேர்வு செய்யப்பட்டு, இன்றைக்கு ஒரு வங்கியினுடைய துணை மேலாளராக பணியாற்றுகிறார் என்கின்ற அந்தப் பெருமையும், எங்களுடைய திராவிட மாடல் அரசினுடைய நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு உரியது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கு, புதிய அலுவலகம் கட்டுவதற்கு உரிய இடத்தினை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், கட்டடத்திற்கான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரைவில் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

**பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வன்:** திருமங்கலம் தொகுதி, திரும ங்கலத்திலுள்ள மாவட்டக் கல்வி அலுவலகம், திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இயங்கி வருவதால், அங்கு புத்தகங்கள், சீருடைகள் போன்ற பொருட்களை வைப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அங்கே பணிபுரியும் அலுவலர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் சிரமமாக இருப்பதால், உடனடியாக இடத்தைத் தேர்வு செய்து, புதிய மாவட்டக் கல்வி அலுவலகத்தைக் கட்டித் தர வேண்டும்.

**அமைச்சர்: அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், உடனடியாக அதற்கான இடம் பார்க்கின்ற வேலையில் நாங்கள் இறங்கியிருக்கின்றோம். கண்டிப்பாக, உடனடியாக நாங்கள் அதைக் கட்டித் தருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# தமிழ்நாட்டின் வளர்ச்சியை யாராலும் தடுக்கமுடியாது!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

**எங்களைப் பொறுத்தவரை, இதுபோன்ற எத்தனையோ தடைகளை உடைத்து எழுந்து வந்தவர்கள். "தடைக்கற்கள் உண்டென்றால், அதை உடைக்கும் தடந்தோள்கள் உண்டு" என்பதை 75 ஆண்டுகளாக மெய்ப்பித்துக் காட்டி வரும் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவன் என்ற தகுதியோடு சொல்கிறேன்..." நான் ஸ்டாலின்! அதுவும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! பாசிசத்தை - எதேச்சாதிகாரத்தை - இந்தியாவில் நெஞ்சுயர்த்தி எதிர்கொண்டு இருக்கும் நாம், இதுபோன்ற சிறுபிள்ளை விளையாட்டுச் செயல்களைப் பார்த்து பயந்துவிட மாட்டோம். போற்றுவோர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்! எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்!" என்பதுதான் இவர்களுக்கு நான் சொல்லும் பதில்! (மேசையைத் தட்டும் ஒலி)**

பேரவைத் தலைவர் அவர்களே!

உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்று தலைவர் கலைஞர் அவர்கள் என்னைப் பாராட்டினார். எங்களுக்கு இப்படித்தான் உழைக்கக் கற்றுக் கொடுத்தார். அந்த உழைப்பால்தான் தமிழ்நாட்டுக்குச் சிறப்பு சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். இந்த உயர்வுக்குக் காரணமான அவை முன்னவர் அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசுத் துறை செயலாளர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### முத்தான 10 சாதனைகள்!

**● பேரவைத் தலைவர் அவர்களே, என் கையில் முதலமைச்சர் என்ற பொறுப்பு வந்து 33 மாதங்கள் ஆகிறது. இவை "முன்னேற்ற மாதங்கள்!" "சாதனை மாதங்கள்!" இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 விழுக்காடு பங்கைத் தருகிறது தமிழ்நாட்டின் பொருளாதார வளம்! இது, திராவிட மாடல் ஆட்சியின் முதல் சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது; இது, இரண்டாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24 விழுக்காடாக இருக்கும்போது தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19 விழுக்காடாக உயர்ந்துள்ளது! இது, மூன்றாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● இந்திய அளவில் பணவீக்கமானது 6.65 விழுக்காடாக இருக்கும்போது, தமிழ்நாட்டில் அது 5.97 விழுக்காடாக குறைந்து உள்ளது! இது, நான்காவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது! இது, ஐந்தாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**• மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது! இது, ஆறாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14-ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாட்டை 3-ஆவது இடத்துக்கு உயர்த்தி உள்ளோம்! இது, ஏழாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● கல்வியில் இரண்டாவது இடத்துக்குத் தமிழ்நாட்டை உயர்த்தியது இந்த ஆட்சியின் எட்டாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பது ஒன்பதாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● இளைஞர்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகள், விளிம்புநிலை மக்கள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோர் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து, தங்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருவதாகச் சொல்லத் தொடங்கி இருப்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் பத்தாவது சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி)**

### பல மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டின் திட்டங்களை அறிந்து கொள்ள வருகை!

இந்தப் பத்து மட்டுமல்ல, இந்தியாவின் தென் மூலையில் ஒரு ஆட்சி நடக்கிறது; அதன் திட்டங்களைத் தெரிந்து வந்து நம் மாநிலத்தில் செயல்படுத்துங்கள் என்று பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களும், அதிகாரிகளும் இங்கு வந்து பார்த்துச் செல்வதுதான் திராவிட மாடல் ஆட்சியின் வரலாற்றுச் சாதனை. இப்படி, இன்று முழுவதும் என்னால் பட்டியலிட்டுக் கொண்டே இருக்க முடியும், ஆனால், நேரம் போதாது.

இந்தச் சாதனைகளுக்கு எல்லாம் மகுடம் சூட்டுவதுபோல் ஒரு சாதனை இருக்கிறது. அது தான் மிக மிக முக்கியமானது. **நமது ஆட்சியில் தமிழ்நாடு அனைத்து வகையிலும் வளர்ந்து வருவதைப் பார்த்து நம் இன எதிரிகளுக்கு பொறாமையும் கோபமும் வருகிறது அல்லவா? அதுதான் திராவிட மாடல் ஆட்சியின் மாபெரும் சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையுடன் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.**

### இன எதிரிகளுக்கு கோபம் ஆளுநரும் விதிவிலக்கல்ல!

ஆதிக்கக் குவியலை அகற்றுவதும், அடிமைப் பள்ளத்தை நிரப்புவதும் இவர்களது கோபத்துக்குக் காரணம். அந்தக் கோபத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் காட்டுகிறார்கள். அரசியல் சட்டப் பதவியில் இருக்கும்ஆளுநரும்அதற்குவிதிவிலக்கல்ல. அதற்காக நாம் அமைதியாக இருக்க முடியாது. நாட்காட்டியில் நகரும் ஒவ்வொரு நாளும், நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் நாளாக அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

ஒவ்வொரு முறை நான் கையெழுத்து போடும் போதும், இதனால் பயன்பெறப்போகும் இலட்சக்கணக்கான மக்களின் முகங்களைப் பார்க்கிறேன். சில திட்டங்களின் பெயரைச் சொல்லி, இதன் மூலமாக எத்தனை இலட்சம் பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்று எனது செயலாளர்களிடம் கேட்டேன். அவர்களின் பதில் எனக்கு மகிழ்ச்சி அளித்தது.

### திராவிட மாடல் ஆட்சியில் இல்லம்தோறும் பயன்பெறும் மக்கள்!

**●மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை, "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை"யாக ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● "விடியல்" பேருந்து பயணத் திட்டம் மூலமாக 445 கோடி முறை பயணித்து பெண்கள் பயனடைந்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தால் பயனடைந்தவர்கள் ஒரு கோடி பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 16 லட்சம் பிள்ளைகள் வயிறார உணவு உண்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● நகைக்கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 13 லட்சத்து 12 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● கூட்டுறவுக் கடன் தள்ளுபடி பெற்றவர்கள் 1 லட்சம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் "புதுமைப் பெண்" திட்டப்படி 2 ஆண்டுகளுக்கு, 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● 'நான் முதல்வன்' திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 லட்சம் இளைஞர்கள் பயனடைந்துள்ளார்கள்.**

**● 'இல்லம் தேடி கல்வித் திட்டத்தில்' 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிப் பிள்ளைகள் பயனடைந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● 62 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பை பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● 2 லட்சம் உழவர்கள் புதிய மின் இணைப்பு பெற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 30 லட்சம் முதியோர் மாதந்தோறும் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 5 லட்சம் மாற்றுத்திறனாளிகள் மாதந்தோறும் பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)**

## திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சி கண்டு இன எதிரிகளுக்கு பொறாமை - கோபம்!

**● கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தால் பயனடைந்தவர்கள் 42 லட்சத்து 33 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● முதலமைச்சரின் ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீடு தொகை உயர்ந்த பிறகு பயன் பெற்றவர்கள் 20 லட்சத்து 55 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● மீன்பிடி கால உதவித்தொகை பெற்றவர்கள் 4 லட்சத்து 86 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● மீன்பிடி இல்லாதகால உதவித்தொகை பெற்றவர்கள் 5 லட்சத்து 15 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தால் பயனடைந்தவர்கள் 2 லட்சம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● 'முதல்வரின் முகவரி திட்ட'த்தினால் பயனடைந்தவர்கள் 19 லட்சத்து 69 ஆயிரம் பேர். (மேசையைத் தட்டும் ஒலி)**

**● 'மக்களுடன் முதல்வர் திட்ட'த்தின் மூலமாக, 3 லட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**● சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 45 லட்சம் குடும்பங்களுக்கு ரூ. 6 ஆயிரம் மற்றும் ரூபாய் ஆயிரம் என நிவாரணத் தொகை வழங்கி இருக்கிறோம்.**

**● அதுமட்டுமல்ல, இந்த 33 மாதங்களில் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்று 6 ஆயிரத்து 569 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உதவிகளை இலட்சக்கணக்கான மக்களுக்கு வழங்கியுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

### கோரிக்கைகளைக் கேட்டு நிறைவேற்றித் தரும் அரசு!

இப்படி, தமிழ்நாட்டின் ஒவ்வொருவர் இல்லந்தோறும் உதவி செய்து வரும் ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி)ஒவ்வொரு தனிமனிதரின் கோரிக்கையையும் கேட்டு நிறைவேற்றிக் கொடுக்கும் ஆட்சி இது. (மேசையைத் தட்டும் ஒலி) இவை எல்லாம் வெறும் எண்ணிக்கை அல்ல; இவை எல்லாம் திராவிட மாடல் ஆட்சியின் எண்ணங்கள்! தமிழ்நாட்டில் சமூகச் சீர்திருத்த ஆட்சி நடைபெற்று வருவதன் அடையாளங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

## கிராமப் புற விளிம்புநிலை மக்களின் 2.50 லட்சம் வீடுகள் சீரமைப்பு!

மகளிருக்கு உரிமைத் தொகை, விடியல் பேருந்து திட்டத்தின் மூலமாக பெண்ணினத்தின் பொருளாதாரசமூக நிலை உயர்கிறது. தன்னம்பிக்கையையும், தற்சார்பு நிலையையும் அவர்கள் அடைகிறார்கள். பெண்களின் சமூகப் பங்களிப்பு 40 விழுக்காட்டில் இருந்து 65 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 16 லட்சம் பிள்ளைகள் வயிறார உணவு உண்கிறார்கள்.**

உயர்கல்வி பெற வரும் அரசுப் பள்ளி மாணவியர்க்கு உதவித்தொகை தருவதன் மூலமாக 34 விழுக்காடு மாணவிகள் அதிகமாக கல்லூரிகளை நோக்கி வந்துள்ளார்கள்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக, உயர் நிறுவன வேலைகளில் சேர்வதற்கு இளைஞர்கள் தகுதி பெற்று விட்டார்கள்.

பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட், கேலோ இந்தியா போட்டிகளை நடத்தியதன் மூலமாக விளையாட்டு ஆர்வம் அதிகமாகி விட்டது.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக்கப்பட்டு வருவதன் மூலமாக கர்ப்பக்கிரகத்தில் சமத்துவம் நுழையத் தொடங்கி விட்டது. பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, சமூக முன்னேற்றத்தையும் சேர்த்து கொடுத்து வருகிறோம்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி என்பதையும் உள்ளடக்கி 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற 'திராவிட மாடல்' கொள்கையை உருவாக்கி, அதன் தடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியானது செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

### உலகளாவிய பத்திரிகைகளில் கவனத்தை ஈர்த்துள்ள கழக அரசு!

அதனால்தான் இந்தியாவின் முன்னணி பத்திரிகைகள் மட்டுமல்ல, உலகளாவிய பத்திரிகை களின் கவனத்தை ஈர்த்து அவர்களது பாராட்டை பெறும் அரசாக கழக அரசு இயங்கி வருகிறது.

**தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை, 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை முதல் பக்கத்தில் பாராட்டி உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**2015-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பைவிட, 2023-ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி சிறப்பாகக் கையாண்டது என்று 'தி இந்து' ஆங்கில நாளேடு பாராட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**பசுமை, சுற்றுச்சூழல் திட்டங்களைச் சிறப்பாகக் கையாண்டு வருவதாக 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' புகழ்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**புத்தாக்க நிறுவனங்கள் மூலமாக 'பெஸ்ட் பெர்பாமென்ஸ்' செய்கிறது தமிழ்நாடு என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' சொல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**மிக்ஜாம் புயலின்போது அரசு இயந்திரம் துரிதமாகச் செயல்பட்டதை 'டெக்கான் கிரானிக்கல்' பாராட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**காலை உணவுத் திட்டத்தை பாராட்டிய 'தினத்தந்தி' நாளிதழ், 'அன்று காமராசர் - இன்று மு.க.ஸ்டாலின்' என்று தலையங்கம் தீட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)**

**மக்களைத் தேடி வரும் அரசு என்று பாராட்டியது 'தினகரன்'.**

**முதலீட்டாளர்கள் மாநாட்டை பாராட்டி தலையங்கம் தீட்டியது 'தினமணி'.**

**கேலோ இந்தியா - சாதித்துக் காட்டிய தமிழ்நாடு என்று எழுதியது 'இந்து தமிழ் திசை'.**

இப்படி முன்னணி பத்திரிகைகள் பாராட்டி இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே!

இவை அனைத்தும் கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையில் சாதிக்கப்பட்டவை. மாநிலங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தும் ஒன்றிய அரசின் தவறான கொள்கைகளை நான் அதிகம் விவரிக்கத் தேவையில்லை, விரும்பவு மில்லை. மாநில முதலமைச்சர்களே டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்தும் அவலத்தைப் பார்க்கிறோம்.

நாம் இரண்டு பெரிய இயற்கை பேரிடர்களைச் சந்தித்தோம். அதற்குக்கூட நிவாரணத் தொகை தரவில்லை.

30.06.2022 முதல் ஜி.எஸ்.டி. இழப்பீட்டு தொகையை நிறுத்தி விட்டார்கள். இதனால் தமிழ்நாட்டுக்கு ஆண்டுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு. எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு புதிய சிறப்புத் திட்டங்களைத் தருவதில்லை. தமிழ்நாட்டுக்காக அறிவிக்கப்பட்ட ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையின் சோகக் கதையை விவரிக்க வார்த்தைகள் இல்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மெட்ரோ ரயில் பணிகள் தொடர்பாக ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். மெட்ரோ ரயில் வேண்டாம் என்று கூறி, மோனோ ரயிலுக்குக் கொடி பிடித்தவர்கள் இன்று மெட்ரோ ரயிலுக்கு வந்திருப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு உங்களது ஆட்சிக்காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தாலும், அதனைச் செயல்படுத்துவதற்கு நீங்கள் ஆட்சியில் இருந்தவரை முனைப்புக் காட்டவில்லை. எங்களது ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், பணி ஆணைகள் வழங்கப்பட்டன; ஒப்பந்தங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன; அனைத்து பணிகளும் தொடங்கப்பட்டன.

### மெட்ரோ ரயில் பணியின் நிலை எதிர்க்கட்சித் தலைவருக்கு பதில்!

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றது முதல், பிரதமரைச் சந்திக்கும் போதெல்லாம் மெட்ரோ ரயில் பணிகளுக்கான நிதி தொடர்பான கோரிக்கை களை வைக்கிறேன். ஆறு நாட்களுக்கு முன்பு கூட பிரதமருக்கு இது தொடர்பாகக் கடிதம் எழுதியிருக்கிறேன். இதற்கான ஒன்றிய அரசின் நிதியை இதுவரை தராததால், இந்த முழுத்தொகையையும் மாநில அரசின் நிதியில் இருந்தும், மாநில அரசு வாங்கும் கடனிலிருந்து மட்டுமே இதுவரை செலவிடப்பட்டுள்ளது. இது நாள் வரையில் பா.ஜ.க.வோடு கூட்டணியில் இருந்தபோது பேசாமல் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போதாவது பேசுகிறாரே என்ற அளவில் ஆறுதல் தருகிறது. இப்போதும் ஒன்றும் குறைந்து விடவில்லை, எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடன் இணைந்து ஒன்றிய அரசிடம் நிதி பெற குரல் கொடுக்க வேண்டும் என தங்கள் வாயிலாகக் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் அரசாணை வெளியிடப்பட்டதா? நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா? என்ற விவரங்களை கேட்டிருக்கிறார்கள்.

### சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம்!

சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளில் நீண்டகாலமாக நிறை வேற்றப்படாத 10 முக்கிய கோரிக்கைகளை, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அனுப்பி வைக்குமாறு, நான் கடந்த 22.08.2022 அன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டேன். அதனடிப்படையில் பெறப்பட்ட பணிகள் 07.10.2023 அன்று எனது தலைமை யில் நடைபெற்ற உயர்நிலை குழு கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்டது.

நடப்பாண்டில் 234 சட்டமன்ற தொகுதிகளில் 797 பணிகள், 11 ஆயிரத்து 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு, அதில் 582 பணிகளுக்கு உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளன. அவற்றில் 63 பணிகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் உள்ள பணிகளுக்கு உரிய ஆணைகள் வழங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்தின்கீழ் அளித்திருக்கக்கூடிய அவர் தொகுதியின் கோரிக்கைகளில், ஐந்து கோரிக்கைகள் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் மூன்றுக்கு உரிய ஆணைகள் வெளியிடப்பட்டு அதில் ஒரு பணி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. மீதமுள்ள இரண்டு பணிகளுக்கு அரசாணை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த அரசு "சொல்வதைத்தான் செய்யும், செய்வதைத்தான் சொல்லும்" என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவருக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பாபநாசம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவினால், அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. இந்த முரண்பாட்டை உடனடியாகக் களைய வேண்டும் என ஒரு நீண்டகால கோரிக்கையை முன் வைத்திருக்கிறார். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர், பிற்படுத்தப் பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின சமூகத்தினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைவதற்குத் தேவையான பல்வேறு நலத் திட்டங்களையும், ஒடுக்கப்பட்ட, நலிவடைந்த, சிறுபான்மையின மக்களின் நலன்களை என்றென்றும் பாதுகாத்து வரும் இந்த அரசு பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்களின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, சட்டவல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, ஆவன செய்யப்படும் என்பதையும் பேரவைத் தலைவர் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலுரையில் முக்கியமான ஒரு அறிவிப்பையும் இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். கிராமப்புற விளிம்புநிலை மக்களின் கோரிக்கையை ஏற்று, கடந்த 2001ஆம் ஆண்டிற்கு முன் பல்வேறு அரசுத் திட்டங்களின் மூலம் கட்டப்பட்ட ஏறத்தாழ 2 இலட்சத்து 50 ஆயிரம் வீடுகளை, அடுத்த இரண்டு ஆண்டுகளில் பழுதுபார்க்கவும், புனரமைக்கவும் 2,000 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைத் தந்ததற்கு நன்றி!

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 நாட்களில் மொத்தம் 15 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 8 உறுப்பினர்கள் 68 திருத்தங்களை அளித்துள்ளனர். இந்த அரசுக்கு உதவும் வகையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் தெரிவித்திருக்கிறார்கள். தங்கள் தொகுதிக்கான கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்கள். அவை உரிய அமைச்சர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது.

உங்களது ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, உங்களின் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு உறுதியாக நிறைவேற்றித் தரும். எனவே, இந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு தங்களது திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன்.

"வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!"

நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலுரை வழங்கினார்.




1500 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குகிறார்! இன்று

# சிவகங்கை மாவட்டத்திற்கு - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் - மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!

சிவகங்கை. பிப். 16-

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழக தலைவர் தளபதி தமிழக முதல்வர் மு .க .ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தினை நிறை வேற்றும் வகையில் செயல்பட்டு வரும் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை 17ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிறார். (17ஆம் தேதி சனிக் கிழமை) காலை 10 மணி அளவில் திருப்பத்தூர் தாலுகா வைரவன் பட்டியில் அமைந்துள்ள பிரமாண்டமான திடலில் நான்கு சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட 1500 கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி விழா சிறப்புரையாற்றுகிறார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி செயலாளராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்ற நாள் முதல் தமிழகமக்களின் உரிமைக்காகவும் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுத்து வருகிறார் . நாட்டின் ஒருமைப்பாட் டினை காக்கும் வகையில் சிறப்பான முறையில் மாநில உரிமைகளைப் பேசி பணியாற்றி வருகிறார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பேச்சுக்கள் இந்திய அளவில் அனைவராலும் ஈர்க்கப்பட்டு கவனத்திற்கு உள்ளாகியுள்ளது. அத்தகைய இளம் தலைவர் சின்னவர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு 17ம்தேதிசனிக்கிழமை நாளை வருகை தருகிறார். தலைவர் கலைஞர் நூற்றாண்டி னை முன்னிட்டு கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த கழக மூத்த முன்னோடி களின் கழகப் பணியினை பாராட்டி பொற்கிழி வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

1500 முன்னோடிகளுக்கு தங்க முலாம் பூசிய மெடல், நிதி உதவி,வேட்டி ஆகியவைகள் தலைவர் கலைஞர் தளபதி முதல்வர் இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஆகியோரின் உருவப்படத்துடன் உள்ள வண்ணபையில் இத்தகைய உதவிகளை வழங்கி அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களால் பாராட்டப்படுகிறார்கள்.

விரைவில் நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெற்றுமக்கள் விரோத பாசிச ஆட்சி நடத்தி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசை அகற்றுவதற்காக கழகத் தொண்டர்கள் ஆற்ற வேண்டிய தேர்தல் பணி குறித்து சிறப்புரை யாற்றிட உள்ளார்.

எனவே இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு , பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய ,நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதற்காக இன்று (16.2.2024 - வெள்ளிக் கிழமை) மாலை சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரைக்கு வருகிறார். மதுரையிலிருந்து கார் மூலம் சிவகங்கை வழியாக திருப்பத்தூர் வருகைதரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை 6.00மணி அளவில் சிவகங்கை வடக்கு ஒன்றியம் பெருமாள் பட்டியில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா 100அடி உயர நினைவுகொடிக் கம்பத்திலும், இரவு 7.00 மணிக்கு சிங்கம்புணரி வடக்கு ஒன்றியம் அரளிக்கோட்டையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு 100அடி நினைவு கம்பத்திலும் கழக கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

தொடர்ந்து 17ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணிஅளவில் வைரவன் பட்டியில் பொற்கிழி வழங்கி சிறப்புரையாற்று கிறார். நிகழ்ச்சி முடிவடைந்து பிற்பகல் 12.30மணி அளவில் தேவகோட்டை யில் முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வே.ரூசோவின் வீட்டிற்கு செல்கிறார்.

அதை தொடர்ந்து ராமநாதபுரம் செல்கிறார்.

இத்தகவலை மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகையினை முன்னிட்டு மாவட்ட எல்கையானபூவந்தியிலிருந்து சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி பைபாஸ், தேவகோட்டை ,மாவட்ட எல்கையான திருவே கம்பத்தூர் வரை சுமார் 200கி.மீ.வரை சாலையின் இருபுறம் கழக கொடிகளா லும் வண்ண மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகையினால் விழாக்கோலமாக காணப்படுகிறது.

---

நாடாளுமன்றத் தேர்தல்-2024

# 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும் விரிவான சுற்றுப் பயணம்!

(திருத்தப்பட்டது)

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024-நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக்குழு (திருத்தப்பட்டது)**

**1.23.02.2024-வேலூர் (காலை 10.00 மணி)-வேலூர் ராணிப்பேட்டை**

**திருப்பத்தூர், ஆரணி (மாலை 3.00 மணி) திருவண்ணாமலை வடக்கு,திருவண்ணாமலை தெற்கு.**

**2.26.02.2024-தஞ்சாவூர் (காலை) தஞ்சை வடக்கு-தஞ்சை மத்திய-**

**தஞ்சை தெற்கு-திருவாரூர்-நாகை-மயிலாடுதுறை-திருச்சி வடக்கு-**

**திருச்சி தெற்கு-திருச்சி மத்திய-புதுக்கோட்டை வடக்கு-புதுக்கோட்டை தெற்கு, விழுப்புரம் (மாலை 3.00 மணி) விழுப்புரம் வடக்கு- விழுப்புரம் தெற்கு-கடலூர் கிழக்கு-கடலூர் மேற்கு-அரியலூர்-பெரம்பலூர்.**

**3.27.02.2024 -சென்னை (மாலை 3.00 முதல்)-காஞ்சிபுரம் வடக்கு-காஞ்சிபுரம் தெற்கு-திருவள்ளூர் கிழக்கு-திருவள்ளூர் மேற்கு -திருவள்ளூர் மத்திய.**

**4.28.02.2024-சென்னை (காலை 10.00 மணி முதல்)-சென்னை வடக்கு-சென்னை வடகிழக்கு-சென்னை கிழக்கு-சென்னை மேற்கு- சென்னை தென்மேற்கு-சென்னை தெற்கு.**

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்**
சென்னை-18. தி.மு.க.
நாள் : 15.2.2024

---

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

## பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் வருகிற 19-2-2024 முதல் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை - 18 பொதுச்செயலாளர்
நாள்- 15-2-2024 தி.மு.க.

---

கழக மூத்த முன்னோடி - இலக்கிய அணி மாநில இணைச் செயலாளர்

# கயல் தினகரன் மறைவு!

## கழக முன்னணியினர் - நிர்வாகிகள் - தோழர்கள் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!

**சென்னை, பிப். 16-**

**கழக இலக்கிய அணியின் மாநில இணைச் செயலாளர் கயல் தினகரன் அவர்கள், நேற்று (15.2.2024 - வியாழக்கிழமை) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**



சிறிது காலமாக உடல் நலம் குன்றியிருந்த அவர், சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றியும், வயது முதிர்வினாலும் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 88. அவரது மனைவி திருமதி சாந்தா அவர்கள். ஏற்கெனவே மறைவெய்தி விட்டார்.

கயல் தினகரன் - சாந்தா இணையருக்கு தமிழ்ச்செல்வன், செழியன் எனும் இரு புதல்வர்கள் உள்ளனர்.

அன்னார் மனறவுற்ற செய்தியறிந்து - ஏ.பி.நம்பர் 1307, 33வது தெரு, 4வது செக்டார், கலைஞர் நகர், சென்னை - 78. (ஸ்ரீ கிருஷ்ணசாமி மெட்ரிகுலேசன் மேனிலைப் பள்ளி பின்புறம்) உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் உடலுக்கு ஏராளமான கழக நிர்வாகிகளும், முன்னணியினரும், தோழர்களும், எழுத்து - இலக்கிய உலகினரும், பல்துறைப் பெருமக்களும் மலர் மாலைகள் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஏற்றுக்கொண்ட கொள்கையிலிருந்து எந்நாளும் வழுவிடாத தூய கழக முன்னோடியாக விளங்கிய கயல் தினகரன் அவர்களின் மறைவு, கழகத்திற்குஇழப்பு எனின் அது மிகையல்ல.

இளமைக் காலம் தொட்டே திராவிட இயக்கத்தின் மீதும் பகுத்தறிவு கொள்கைகள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தன்னை திராவிட இயக்கச் செயல்பாடுகளில் பங்கெடுத்துக் கொண்டார்.

சற்றொப்ப எழுபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இயக்கம் (தி.மு.க.) ஒரே தலைமை (கலைஞர்) என வாழ்ந்தவர். கலைஞரின் தீவிர பற்றாளர். அன்னாருடைய உடல் இன்று (16.2.2024-வெள்ளிக் கிழமை) காலை 10 மணியளவில் இறுதி மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப் படவுள்ளது.

அவரது வாழ்க்கை வரலாறு வருமாறு:-

கயல் தினகரன் (கலைஞர் விருது) இராமநாதபுரம் மாவட்டம், தேவகோட்டை நகரத்தில் 1936ஆம் ஆண்டு பிறந்தார். தமது 31ஆம் அகவையில் தலைவர் கலைஞர் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.

1952ஆம் ஆண்டில் எழுதும் வேட்கையின் விளைவாக 'சூரியகாந்தி' எனும் கையெழுத்து இதழினைத் தொடங்கினார்.

பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நாடகத்தின் மீது ஏற்பட்ட ஈடுபாட்டின் காரணமாக 'மறுமணம்' எனும் நாடகம் எழுதி அரங்கேற்றினார். அந்த சீர்திருத்த நாடகத்தில் பெண் வேடம் பூண்டு நடிக்கவும் செய்தார்.

இவர் 'கிளர்ச்சி, 'சங்கப் பலகை', 'மனிதன்', 'கலை மன்றம்', 'காதல்', 'சுதந்திரன்' ஆகிய வார இதழ்களிலும் 'தமிழ்நாடு' நாளிதழிலும் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதி வந்தார்.

'வணங்காமுடி', 'செட்டிநாடு' ஆகிய வார இதழ்களின் துணை ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

இவர் 1957ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகள் 'தென்றல்', 'முல்லை', கண்ணப்பா வள்ளியப்பனின் "இனமுழக்கம்" ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகப் பணி புரிந்தார். சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு இவரை ஊக்கப்படுத்தி, இவரது படைப்புகளுக்கு மெருகேற்றச் செய்தார்.

1962, 63ஆம் ஆண்டுகளில் குன்றக்குடி அடிகளார் தொடங்கிய 'தமிழ்' மற்றும் 'அறுவடை' ஆகிய திங்கள் இதழ்களிலும் துணை ஆசிரியர் பொறுப்பேற்று இதழ்கள் வெளிவர துணை நின்றார்.

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருக்கு வரவேற்பளிக்க நடைபெற்ற சென்னை கடற்கரைக் கூட்டத்தில் தினகரன் அவர்கள் தனது சொந்த முயற்சியில் தொடங்கிய 'தென்னகத் தலைவன்' எனும் கிழமை ஏட்டினை அறிஞர் அண்ணா வெளியிட்டார். அவ்விழாவில் கலைஞர் அவர்களுக்கு கணையாழி அணிவித்து மகிழ்ந்தார்.

இவர் 1964ஆம் ஆண்டு முதல் பத்தாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையான முரசொலி மற்றும் முத்தாரம், மறவன் மடல் ஆகிய இதழ்களில் துணை ஆசிரியராக பணியாற்றினார். முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் தானும் ஒருவர் என்பதை எண்ணிப் பெருமைப்படுபவர்.

இவரது எழுத்துப்பணி முரசொலி ஏட்டில் தொடர்கிறது என்பதோடு, 'அக்குடும்பத்தில் ஒருவனாகவே கலந்துள்ளேன்" என்று பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

இவர் 1974ஆம் ஆண்டில் செ. மாதவன் அவர்கள் தொடங்கிய 'தமிழ் முரசு' நாளேட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்று தரமாக நடத்திக் காட்டினார்.

இவர் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் மெயில் ஆங்கில ஏட்டின் ஆசிரியர் இராசன் அவர்களோடு மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார்.

1967ஆம் ஆண்டு அண்ணா முதல்வராக இருந்தபோது அண்ணாவுடன் ஒரு வாரம் என்ற தலைப்பில் சேகரித்த செய்தியை இவர் எழுதி முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்தது. இது வரலாற்று முக்கியம் வாய்ந்தது ஆகும். மேலும் முதல்வர் அண்ணாவின் சிறப்புக் குறித்து இவர் எழுதிய 'மகுடமெடுத்து தமிழன்னை சூட்டினாள்' எனும் பாடல் இசைத்தட்டாக வெளி வந்து நன்கு விற்பனை ஆனது. அறிஞர் அண்ணாவின் மனந்திறந்த பாராட்டைப் பெற்றார்.

1985ஆம் ஆண்டு புது டெல்லியில் நடைபெற்ற அனைத்திந்திய எழுத்தாளர் சங்க மாநாட்டில் கலந்து கொண்டு ஆய்வுரை ஆற்றினார். தற்போது இவர் மாநில தி.மு.க. இலக்கிய அணியின் இணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றி வந்தார்.

கழகத் தொண்டராகிய கயல் தினகரன் அவர்களுடைய இலட்சியப் பிடிப்பையும்,பத்திரிகையாளர் பணியையும் பாராட்டுகின்ற வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் 15.9.2001 அன்று சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

# நெல்லை கிழக்கு மாவட்டத்தில் வழக்கறிஞரணி வார் ரூம்!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி. திறக்கிறார்! இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை பிப்.16.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி WAR ROOM திறப்பு இன்று (16.02.24 - வெள்ளிக்கிழமை) பகல் 12 மணி அளவில் மாவட்ட கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாநில சட்டத்துறை செயலாளர் என். ஆர். இளங்கோ எம்.பி. திறந்து வைக்க உள்ளார்.என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு.

இந்த நிகழ்ச்சிக்கு மாநில சட்டத்துறை இணை மற்றும் துணைச் செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

WAR ROOM திறப்பு நிகழ்ச்சியினை தொடர்ந்து பகல் 12.15 மணி அளவில் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, நாங்குநேரி,வள்ளியூர், இராதாபுரம் மற்றும் மாவட்ட நீதி மன்றங்களில் பணியாற்றும் கழக வழக்கறிஞர்கள் பங்கேற்கும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான ஆலோசனை கூட்டம் மாவட்டக் கழக அலுவலக வளாகத்தில் வைத்து நடைபெற உள்ளது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள கழக வழக்கறிஞரணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சியில்

# மருத்துவத் துறைப் பணியிடங்கள் - விருதுகள் - கட்டமைப்பு வளர்ச்சி!

## சட்டப்பேரவையில் - எதிர்க்கட்சித் தலைவருக்கு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

**சென்னை, பிப். 16-**

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு :**

**மருத்துவத்துறைப் பணியிடங்கள், விருதுகள், கட்டமைப்பு வளர்ச்சி குறித்து விரிவாகப் பதிலளித்தார்.**

சட்டப்பேரவையில், ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது மருத்துவர், செவிலியர் காலிப் பணியிடம் தொடர்பான கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதில் வருமாறு:-

எதிர்க்ட்சித் தலைவர் அவர்கள் ஊடகத்தை அதிகம் பார்ப்பதில்லை என்பதை அவரது பேச்சு வெளிப்படுத்தியுள்ளது. மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருந்தது என்பது உண்மை, அது எதனால் என்பது அவருக்கும் தெரியும். இது தொடர்பாக நிலுவையில் இருந்த 30க்கும் மேற்பட்ட வழக்குகள் தீர்வு காணப்பட்டு, ஒரு வாரத்திற்கு முன்பு 1021 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கு காலிப்பணியிடங்கள் இருந்ததோ 20 மாவட்டங்களில் காலிப் பணி யிடங்கள் அதிகமாக இருந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, இந்த 1021 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக கடந்த 8 ஆண்டுகளாக உதகையில் 57 மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருந்தன, தற்போது 55 மருத்துவர்கள் பணியில் இணைந்துள்ளனர். மேலும், 1251 மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளது. அதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் அனைத்தும் ஊடகங்களில் வந்துள்ளன.

தமிழ்நாடு முழுவதும் 864 செவிலியர் பணியிடங்கள் காலியாக இருந்தது, நேற்றைக்கு முன்தினம் MRB கோவிட் காலத்தில் பணியாற்றிய செவிலியர்கள் 977 பேருக்கு பணியாணைகள் நேற்றைக்கு முன்தினம் தரப்பட்டது. செவிலியர் காலிப்பணியிடங்கள் 100% நிரப்பப்பட்டு, Arising Vacancies ம் நிரப்பப்பட்டுள்ளது. இந்த செய்தியும் அனைத்து ஊடகங்களிலும் வந்துள்ளது. மருந்தாளுநர் பணியிடங்கள் 986, சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் 1066, கிராம சுகாதார செவிலியர்கள் 2250 ஆகிய MRB தேர்வுகள் முடிக்கப் பட்டுள்ளது, இதுதொடர்பாக வழக்குகள் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த வழக்குகள் 15 நாட்களில் முடிவுக்கு வரும். ஆனால் மருத்துவத்துறையில் காலிப்பணியிடங்கள் அதிகமாக இருப்பது போன்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது உண்மை இல்லை.

**தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது**

2012 ஆம் ஆண்டு முதல், தேசிய தர உறுதி நிர்ணய திட்ட விருது (NQAS - National Quality Assurance Standards Certificate) ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், வட்டார மருத்துவமனைகள் ஆகியவற்றில் மருத்துவ கட்டமைப்புகள் மற்றும் மருத்துவ சேவைகளின் செயல்பாடுகளை பொறுத்து, இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது 2012 முதல் 2024 வரை 12 ஆண்டுகளில் 614 விருதுகள் தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ளது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 07.05.2021க்கு பிறகு 545 விருதுகள் கிடைத்துள்ளது. எதிர்கட்சி தலைவர் 4 ஆண்டுகாலம் முதலமைச்சராக பொறுப்பு வகித்த காலம், அதற்கு முன்னாள் 6 ஆண்டுகாலம் ஆட்சி காலத்தில் வெறும் 69 விருதுகள் மட்டுமே தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ளது.

**மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ்**

மகப்பேறு அறை, கர்ப்பிணிகளுக்கான அறுவை அரங்கின் தரம் உயர்த்தும் திட்ட சான்றிதழ் (LaQshya - Labour Room Quality Improvement Initiative) என்ற விருது 2017 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 7 ஆண்டுகளாக வழங்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை 84 ஆகும். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டரை ஆண்டுகளில் 55 விருதுகள் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் முன்பு நடைபெற்ற ஆட்சி காலத்தில் 29 விருதுகள் மட்டுமே கிடைத் துள்ளது.

**மருத்துவ கட்டிடங்கள் பற்றிய விவரம்**

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் கடந்த இரண்டரை ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள மருத்துவ கட்டிடங்களின் விவரங்களை தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். இதனை எதிர்கட்சித் தலைவர் அவர்களே அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களோடு ஒப்பிட்டு பார்த்துக்கொள்ளட்டும்.

**புதிய ஆரம்ப சுகாதார நிலையம் - புதிய மருத்துவக் கல்லூரி :**

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி செய்த 4 ஆண்டு கால ஆட்சியில் கொண்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் பட்டியலை உங்களிடம் சமர்ப்பிக்க சொல்லுங்கள். 2286 ஆரம்ப சுகாதார நிலை யங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. 8713 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. இதில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் 4 ஆண்டு கால ஆட்சியில் கொண்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களின் பட்டியல்களை தெரிவிக்கச் சொல்லுங்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கடந்த ஆண்டு ஒன்றிய அரசிடம் கேட்டு 25 ஊரக ஆரம்ப சுகாதார நிலையங்கள், 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கொண்டு வந்துள்ளார்.

2011 பிப்ரவரியில் கலைஞர் அவர்கள் தான் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைய வேண்டும் என்று கொண்டு வந்து செயல்படுத்தப்பட்டது தான், எதிர்கட்சி தலைவர் அவர்கள் குறிப்பிடும் 11 புதிய மருத்துவ கல்லூரிகள் திட்டம். இந்த 11



மருத்துவக் கல்லூரிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு தான் ரூ.400 கோடி செலவில் மருத்துவமனை கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 9 இடங்களில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது நாகப்பட்டினம் மற்றும் உதகமண்டலம் ஆகிய 2 இடங்களில் மருத்துவமனை கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**மினி கிளினிக்**

மினி கிளினிக் என்பது ஓராண்டு காலத்திற்கான திட்டம் ஆகும். இது தேசிய சுகாதார குழுமம் (NHM ) ஆல் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதில் ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே இருந்தார், செவிலியர்கள் இதில் இல்லை. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் வந்தவுடன் இது நிறுத்தப்பட்டது. மேலும் இந்த மினி கிளினிக் நிறைய இடங்களில் சுடுகாடு இடங்கள், கழிவறை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டது. இது அந்த ஓராண்டு காலத்துடன் நிறுத்தப்பட்டது. இதன் பிறகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று மொகாலா கிளினிக்கைப் பார்த்து தமிழ்நாட்டில் அதுபோன்ற மருத்துவமனைகள் வர வேண்டும் என்று முடிவு செய்து, 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கத் தொடங்கி 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவத் துறை குறித்து விரிவான பதில் அளித்தார்.

### கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமை! நாடாளுமன்றத் தேர்தல் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்!

# மதுரையில் நாளை மாபெரும் பொதுக்கூட்டம்!

## ஆ.ராசா எம்.பி. - அமைச்சர்கள் பி.மூர்த்தி - பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் சிறப்புரை!

மதுரை, பிப் 16 -

மதுரையில் நாடாளுமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றி பெறும் வகையில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பாசிசம் வீழட்டும் இந்தியா வெல்லட்டும் என குரல் எழுப்பும் வகையில் மக்களை சந்திக்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., தலைமை வகிக்க உள்ளார். கழக துணைப் பொது செயலாளர் ஆ.ராசா எம்.பி., மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர்சிறப்புரையாற்ற உள்ளனர்,

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாற்பதும் நமதே நாடும் நமதே என குரல் கொடுத்து வருகிறார், கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தியாவை மீட்க வேண்டும், அதற்கு 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி காண வேண்டும் என தீவிரமாக செயலாற்றி வருகின்றார்.

அதன்படி வரும் நாடாளுமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற தாரக மந்திரமாக எல்லோர் மனதிலும் நிலையாய் நிற்கும் வகையிலும் மக்களை சந்திக்கும் பொதுக் கூட்டங்கள் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பாசிச ஆட்சி வீழட்டும் இந்தியா வெல்லட்டும் என்ற குரல் வான் எட்ட பரப்பும் வகையில் மதுரை நாடாளுமன்ற தேர்தலில் மாபெரும் வெற்றிக்காக மதுரையில் நாளை (17.02.2024 - சனிக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் அண்ணாநகர் அம்பிகா தியேட்டர் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகத் துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர்சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

இக்கூட்டத்திற்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., தலைமை வகிக்கின்றார். கழக பகுதி செயலாளர்கள் பி.அறிவு நிதி, எஸ்.சித்திக், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஜானகி, எஸ்.செல்வராஜ், கே.ராஜேஷ் கண்ணன், மு.கார்த்தவ ராயன், பாண்டி ஈஸ்வரி, சுரேஷ், பொன்வளவன், கே.ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றார்கள். மாவட்ட துணை செயலாளர், நகரமைப்புக் குழு தலைவர் ஜெ.மூவேந்திரன் வரவேற்புரை நிகழ்த்து கிறார். கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன். முத்துராம லிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராமன், கே.தனசெல்வம், மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநகர் மாவட்ட கழக நிர்வாகி கள் மா.ஒச்சு பாலு, எஸ்.ராகவன், சி. சின்னம்மாள், ஆர்.முருகவேல், கழக மாநில நிர்வாகிகள் அக்ரி கணேசன், சம்மட்டிபுரம் ஆர்.கணேசன், பி.பாக்கியநாதன், சி.வீர கணேசன், இளைஞர் அணி சவுந்தரராஜன், கழக தொகுதி பொறுப்பாளர்கள் சுப.த. திவாகரன், எஸ். சுந்தர ராசன், த.வனராஜா, இரா.பாண்டியன், மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கரு.தியாகராஜன், ஆர். வடிவேல் முருகன், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேருபாண்டியன், மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி. ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் ரோகிணி பொம்ம தேவன், ஆசைக் கண்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சூரியகலா கலாநிதி, மாநில அமைப்பு சாரா அணி ஏ. கே.பூபதி, கழகத் தொகுதி பார்வையாளர்கள் பெருநாழி போஸ், வா.து.ந. ஆனந்த் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர். மற்றும் மதுரை மாநகர், மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் எஸ்.டி.பிரேம் குமார் நன்றி உரையாற்ற உள்ளார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரை மாநகர் மற்றும் மதுரை வடக்கு மாவட்டக் கழகத்தினர் செய்து வருகின்றார்கள்.




17.02.2024 – சனிக்கிழமை
கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி
இடம் : கீழக்கரை P.S.M மஹால், நேரம் 3.00 மணி
7.00 மணிக்கு உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்
உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் மற்றும்
கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழா!
முகவை மண்ணிற்கு வருகை தரும்
மாண்புமிகு
உதயநிதி
ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!!
ARASU ARTS
அன்புடன்
மாண்புமிகு ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் Bsc., BL.
பிற்படுத்தப்பட்டோர் (ம) உயர்கல்வித் துறை அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழு தலைவர்.
காதர்பாட்சா முத்துராமலிங்கம் M.L.A.,
இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர்
சட்டமன்ற உறுப்பினர்
செ.முருகேசன் M.L.A.,
பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.2.2024) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன்குமார் அவர்களின் மகள் கே.திவ்யா – கே.ரஞ்சித் குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### கிளாம்பாக்கம் பேருந்து முனைய செயல்பாடுகள்

## முதல் வழிகாட்டுதல் குழுக் கூட்டம்!

சென்னை, பிப். 15–

அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அறிவுறுத்தலின் படி நேற்று முன்தினம் (14.02.2024) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராஜன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தலைமையில் கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய செயல்பாடுகள் தொடர்பாகவும், பேருந்துகளின் இயக்கம் தொடர்பாகவும் முதல் வழிகாட்டுதல் குழுக் கூட்டம் (1st Steering Committee Meeting) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிப்பது தொடர்பாகவும், இம்முனையத்தையொட்டி தேசிய நெடுஞ்சாலைத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மேம்பாட்டுப் பணிகள் தொடர்பாகவும், போக்குவரத்து நெரிசலை தவிர்க்க போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து முறையாக பேருந்துகளை இயக்கி நெறிப்படுத்துதல் தொடர்பாகவும், தெற்கு ரயில்வே சார்பில் கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்கும் பணிகளை விரைவில் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து குழுமம் (CUMTA) சார்பில் தென் மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய அரசு போக்குவரத்துக் கழக (SETC & TNSTC) 4000 பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கும் “ஆரோக்கியம் மற்றும் சுகாதார மேம்பாடு” என்னும் தலைப்பில் பேருந்து முனையத்தை சுத்தமாகவும், உடலை ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வு தொடர்ந்து பயிற்சி வகுப்புகள் அனைவருக்கும் வழங்குவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

## மாநிலத்தில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்!

### சட்டப்பேரவையில் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, பிப். 16 –**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசுகையில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறுக்கிட்டு, மாநிலத்தில் நடைபெறும் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் குறித்து விளக்கமளித்தார்.**



சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்:** நீங்கள் சிறிது rest எடுத்துக்கொள்ளுங்கள். வெள்ளத் தடுப்புக்கு என்ன பணிகள் செய்தீர்கள் என்று கேட்டார்கள். ஆரம்பத்திலிருந்தே சொல்கிறேன், நான் வந்ததிலிருந்தே 2021-2022 ஆம் ஆண்டு நீண்டகால நிரந்தர வெள்ள தடுப்பு பணிகளுக்காக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 16 உப பணியிடங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் செயலாக்கம் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. 2022-2023 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் ரூ. 434 கோடியில் 16 பணிகள் எடுத்து வேகவேகமாகப் பணிகள் முடிந்திருக்கின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு சுற்றுவட்டாரதத்தில் 9 பணிகள், ரூ.731 கோடிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் இருக்கின்றன.

கூடுதலாக மாநில பேரிடர் நிதியில் கடலூர், செங்கல்பட்டு மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கு 4 பணிகளுக்கு 118 கோடி ரூபாய் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### புதிதாக நாளொன்றுக்கு

## கோவை மாநகருக்கு - 300 எம்.எல்.டி. தண்ணீர் வருகிற திட்டம்!

### சட்டப்பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

**சென்னை, பிப்.16 –**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் , கேள்வி நேரத்தின்போது பதிலளித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, “கோவை மாநகருக்கு புதிதாக நாளொன்றுக்கு 300 எம்.எல்.டி. தண்ணீர் வருகிற திட்டம் துவங்கி விட்டது!” என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**எஸ். பி. வேலுமணி :** கோவை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியாக இருக்கும் சிறுவாணி அணையிலிருந்து மாநகர மக்களுக்கு வழங்கப்படும் 73 MLDக்கு பதிலாக 38 MLD மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு 25 நாட்களுக்கு ஒருமுறை தான் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதுகுறித்து விசாரித்ததில், கேரள அரசு சிறுவாணி அணையிலிருந்து வழங்கக்கூடிய தண்ணீரை சுமார் 35 MLD குறைவாக வழங்குவதாகத் தெரிய வந்துள்ளது. இதுகுறித்து, கேரள மாநில அரசுடன் கலந்துபேசி, சிறுவாணி அணை நீரை உரிய அளவில் பெறவும், நமது உரிமையை நிலைநாட்டவும் இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் கே.என்.நேரு:** கேரள அரசு சிறுவாணி தண்ணீரை குறைவாகத் தருகிறது என்பதை நான் ஏற்கெனவே நேற்றைய கூட்டத்தில்கூட சொல்லியிருக்கிறேன். 83 MLD தர வேண்டும். ஆனால், 38 MLD தான் தருகிறார்கள். மழை இல்லாத காரணத்தினால், ஆழியாறிலிருந்து விவசாயத்திற்கு அவர்களுக்கு தரக்கூடிய நீரை நாம் குறைவாக தருகிற காரணத்தால், சிறுவாணியிலிருந்து நாங்கள் உங்களுக்குத் தரவில்லை என்று சொன்னார்கள்.

கடந்த முறை சொன்ன போதுகூட உடனடியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலத் தலைவருடன் பேசி, நேரடியாக முதலமைச்சர் அவர்களுடன் பேசி உடனடியாகத் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

நேற்றுகூட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜன் அவர்களிடம் இதுபோல் இருக்கிறதே என்று கேட்டபோது, நான் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, சிறுவாணி தண்ணீரைப் பெறுவதற்குரிய முயற்சிகளைத் தொடர்ந்து அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக, நேற்று 168 MLD தண்ணீர் பில்லூர்3வது திட்டத்தின் கீழ் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில், மின்சாரம் கொஞ்சம் குறைவாக வருகிற காரணத்தால், 2 மோட்டார்கள் மட்டும் போடப்பட்டிருந்தது. இப்போது, 6 மோட்டார்கள் போடப்பட்டு, மின்சாரம் சரி செய்யப்பட்டு, புதிதாக நாளொன்றுக்கு 300 MLD அளவிற்கு கோவை நகருக்கு தண்ணீர் வருகிற அந்தத் திட்டம் துவக்கப்பட்டு விட்டது.



எனவே, கோவை நகருக்கு நிச்சயமாக ஒரு நாள் விட்டு ஒரு நாளுக்கு குடிநீர் நிச்சயமாகக் கொடுக்கப்படும். வெள்ளலூர் பேருந்து நிலையத்தைப் பற்றிச் சொன்னீர்கள். உங்கள் காலத்திலே TWAD Boardக்குச் சொந்தமான இடத்தில் இந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. அந்தப் பேருந்து நிலையத்தை உடனடியாகச் சரிசெய்கிறபோது, அந்த இணைப்புச் சாலைகள், திருச்சியிலிருந்து வருகிற சாலையும், அதையொட்டி இந்தப்பக்கம் வருகிற இணைப்புச் சாலையும் அகலப்படுத்தப்பட்டால் தான் பேருந்து நிலையம் வெற்றிபெற முடியும்.

நான் அங்கு சென்று பார்த்தேன். Road குறுகலாக உள்ளது. பேருந்து வரும்போது அது சரியாக இருக்காது என்று அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். எனவே, இந்த ஆண்டு அந்தப் பணியை எடுத்து முடிப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் - மதுரையில் கழக இலக்கிய அணி சார்பாக

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பு புகைப்படக் கண்காட்சி!

### வி.பி.கலைராஜன் தலைமையில் - அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைக்கிறார்!

சென்னை, பிப். 16 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி, புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் மதுரையில் கழக இலக்கிய அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு வரலாற்று சிறப்புப் புகைப்படக் கண்காட்சி இன்று (16.2.2024) மற்றும் நாளை (17.2.2024) ஆகிய இரு தினங்கள் மதுரை துவாரகா பேலஸில் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறுகிறது. கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் தலைமையில் புகைப்படக் கண்காட்சியை வணிகவரித் துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்து சிறப்புரையாற்று கிறார்.

இதில் தேர்தல் பிரச்சாரக் குழுச் செயலாளர் கம்பம் செல்வேந்திரன், நாஞ்சில் சம்பத், திராவிட இயக்க எழுத்தாளர் வே. மதிமாறன், மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.தளபதி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னணியினர் கலந்து கொள்கின்றனர்.




# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” - பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!



## தலைமைக் கழக அறிவிப்பு



2021சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களை நேரடியாகக் கேட்டறிந்திட கழக முன்னணியினர் ‘விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்’ என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024- இல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக, கழக முன்னணியினர் **“உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்”** என்ற தலைப்பில் நாடாளுமன்றத் தொகுதி வாரியான கூட்டங்களில் பங்கேற்று சிறப்புரை யாற்றவுள்ளனர்.

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் குரலாக **பிப்ரவரி 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில்** கீழ்க்கண்டவாறு நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களை பொறுப்பு அமைச்சர்களுடன் இணைந்து, நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளைச் சார்ந்த மாவட்ட நிர்வாகிகள், சார்பு அணியினர், பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கிளைச்செயலாளர்கள், பூத் கமிட்டியினர் ஆகியோர் பங்கேற்கும் பிரம்மாண்ட கூட்டங்களாக நடத்திட வேண்டும்.

| நாடாளுமன்றத் தொகுதி | | சிறப்புரை |
|---|---|---|
| **நாள் : 16.02.2024 (வெள்ளிக்கிழமை)** | | |
| சிவகங்கை | - | மாண்புமிகு **இ.பெரியசாமி** |
| திருநெல்வேலி | - | திருமதி **கனிமொழி கருணாநிதி**, எம்.பி., |
| விழுப்புரம் | - | திரு. **ஆர்.எஸ்.பாரதி** |
| தூத்துக்குடி | - | திரு. பொன். முத்துராமலிங்கம் |
| கடலூர் | - | மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர் |
| திருபெரும்புதூர் | - | மாண்புமிகு மா.சுப்பிரமணியன் |
| ஈரோடு | - | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| நாமக்கல் | - | திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., |
| கன்னியாகுமரி | - | திரு. திண்டுக்கல் ஐ.லியோனி |
| மயிலாடுதுறை | - | பேராசிரியர் சபாபதிமோகன் |
| திருவண்ணாமலை | - | மாண்புமிகு முனைவர் கோவி.செழியன் |
| **நாள் : 17.02.2024 (சனிக்கிழமை)** | | |
| கிருஷ்ணகிரி | - | மாண்புமிகு பொதுச்செயலாளர் **துரைமுருகன்** |
| திருச்சி | - | கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**, எம்.பி., |
| திருப்பூர் | - | மாண்புமிகு **கே.என்.நேரு** |
| அரக்கோணம் | - | முனைவர் **க.பொன்முடி** |
| மதுரை | - | திரு. **ஆ.இராசா**, எம்.பி., |
| விருதுநகர் | - | திருமதி **கனிமொழி கருணாநிதி**, எம்.பி., |
| இராமநாதபுரம் | - | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| வேலூர் | - | மாண்புமிகு எ.வ.வேலு |
| கள்ளக்குறிச்சி | - | மாண்புமிகு மா.சுப்பிரமணியன் |
| கோவை | - | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| திண்டுக்கல் | - | திரு.பொன்முத்துராமலிங்கம் |
| சிதம்பரம் | - | மாண்புமிகு முனைவர் கோவி செழியன் |
| **நாள் : 18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | | |
| திருவள்ளூர் | - | மாண்புமிகு பொதுச்செயலாளர் **துரைமுருகன்** |
| தஞ்சாவூர் | - | கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**, எம்.பி., |
| பெரம்பலூர் | - | முனைவர் **க.பொன்முடி** |
| கரூர் | - | திரு. **ஆ.இராசா**, எம்.பி., |
| புதுச்சேரி | - | திரு. **ஆர்.எஸ்.பாரதி** |
| பொள்ளாச்சி | - | திரு. திருச்சி சிவா, எம்.பி., |
| காஞ்சிபுரம் | - | மாண்புமிகு எ.வ.வேலு |
| தருமபுரி | - | திரு. எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| நாகப்பட்டினம் | - | மாண்புமிகு எஸ்.எஸ். சிவசங்கர் |
| தேனி | - | திரு. பொன்.முத்துராமலிங்கம் |
| நீலகிரி | - | திரு. திண்டுக்கல் ஐ.லியோனி |
| தென்காசி | - | முனைவர் சபாபதிமோகன் |
| சேலம் | - | திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., |
| ஆரணி | - | மாண்புமிகு முனைவர் கோவி. செழியன் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 11.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### நீர்வளத்துறையின் அனுமதியைப் பெற்று

# வேட்டவலம் பேரூராட்சியில் கிணறு வெட்ட நடவடிக்கை!

## பேரவையில் கு.பிச்சாண்டி கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதில்!

**சென்னை, பிப்.16 - சட்டப்பேரவையில் கீழ்ப் பெண்ணாத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் பேரவைத் துணைத் தலைவருமான கு.பிச்சாண்டி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கே.என்.நேரு, நீர்வளத்துறையின் அனுமதியைப் பெற்று, வேட்டவலம் பேரூராட்சியில் கிணறு வெட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் எழுப்பப் பட்ட கேள்விகளும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):** எனது கீழ்ப்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே, கீழ்ப்பெண்ணாத்தூர் மற்றும் 130 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளது. ஆனால், அதில் pvc pipeகள் இருப்பதால், வழியிலே இருக்கக்கூடிய நிலத்திலே இருப்பவர்கள் அதை உடைத்து தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குறிப்பிட்ட கீழ்ப்பெண்ணாத்தூர் பகுதிக்கு அந்தத் தண்ணீர் வரமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த pipeகளை எல்லாம், DI pipeகளாக மாற்றினால்தான், அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தினுடைய வெற்றிக்கு கண்டிப்பாக அந்த DI pipeகள் அமைக்க வேண்டும். அதேபோல, ஜல் ஜீவன் திட்டத்திலே, என்னுடைய வேட்டவலம் பேரூராட்சியிலே, குடிநீர் திட்டத்திற்காக கிணறு வெட்டுவதற்கு, ஏரிகளிலே இதுவரை அனுமதி வழங்கப்படாததால், கிணறு வெட்டப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதையும் செய்து என்னுடைய தொகுதியின் அனைத்து கிராமங்களுக்கும் தங்குதடையின்றி குடிநீர் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

### ஆய்வு செய்து நடவடிக்கை!

**அமைச்சர் கே.என். நேரு:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்த ஊருக்குப் போகின்றபோதே இதைச் சொன்னார்கள். உடனடியாக, pipeகளை மாற்றி புதிய pipeகள் போடுவதற்கு, இரும்பு pipeகளாகப் போடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உரியமுறைப்படி ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப எவ்வளவு விரைவாகச் செய்யமுடியுமோ அதைச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவதாக, கீழ்ப் பெண்ணாத்தூர் பகுதியில் ஏரியில் புதிய ஆழ்துளைக் கிணறு வெட்டி, அந்தக் கிணறு மூலமாகத் தண்ணீர் தரலாம் என்று ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். தலைமை அலுவலகம் அனுமதியளித்தால்தான் அதனைச் செய்யமுடியும் என்று அப்பகுதியில் உள்ள நீர்வளத் துறைப் பொறியாளர் அவர்கள் சொன்னார். இதுகுறித்து, நீர்வளத் துறை அதிகாரிகளிடம் பேசினோம். நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்து, உரிய முறை யில் நீர்வளத் துறையின் அனுமதியைப் பெற்று, கிணறு வெட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே உறுப்பினர் அவர்களுக்கு இதுகுறித்து சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள், நீர்வளத் துறை அமைச்சரைச் சந்தித்து அதற்கான அனுமதி பெற்றால், விரைவாக அப்பணிகள் முடிக்கப்படும். Pipeகளை மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**எஸ்.சதாசிவம்:** மேட்டூர் தொகுதியில் கோளூர் ஊராட்சி பெரிய ஊராட்சி. அந்தக் கோளூர் ஊராட்சியில்தான் காவேரி நீர் ஓடுகிறது. அந்த ஊராட்சி 22,000 வாக்காளர்களைக் கொண்டது. பள்ளியப்பட்டிக்கும், கூனூர் கிராமத்திற்கும் தனி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீர்வளத் துறை அமைச்சரும், நம்முடைய பொறுப்பு அமைச்சர் கே.என். நேரு அவர்களும் நிறைவேற்றிக் கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

### 3 ஆண்டுகளில் 58 திட்டங்கள்!

**அமைச்சர் கே.என். நேரு:** நம்முடைய கழக ஆட்சி தொடங்கப்பட்டு, இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 3 ஆண்டுகளில் 58 புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.7,148 கோடி. நாளொன்றுக்கு 663.36 மில்லியன் லிட்டர், 103 இலட்சம் மக்களுக்காக பயன்பட்டு வருகிறது.

### ரூ-4.35 கோடியில் கூட்டுக் குடிநீர் திட்டம்!

நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிற புதிய திட்டங்கள்; ரூ.15,155.89 கோடிக்கு புதிய திட்டங்களுக்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதில் பயன்பெறுகின்ற மக்கள் தொகை 75.45 இலட்சம் மக்கள். நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு நடைபெற்று வரும் மறு சீரமைப்புத் திட்ட ங்கள், ஏற்கெனவே பைப் உடைந்திருக்கிறது என்று சொன்னார்களல்லவா, அதில் திட்ட மதிப்பீடு ரூ.1,258.35 கோடி. இதில் 50 இலட்சம் மக்கள் பயன்பெறுகிற வகையில் இத்திட்டம் நிறைவேற்ற ப்பட்டிருக்கிறது.

உறுப்பினர் எஸ்.சதாசிவம் அவர்கள் கேட்டு கொண்டதைப்போல, 13 திட்டங்கள் ஆய்வில் உள்ளன. அதன் திட்ட மதிப்பீடு 19,110 கோடி ரூபாயாக இருக்கிறது.

ஒரு கோடி மக்கள் பயன்பெறுகிற வகையில் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆட்சி ஏற்பட்ட 3 ஆண்டு காலத்தில், 4 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மக்களுக்கு பயன்படும் வகையில் செயல்பட்டு வந்திருக்கிறது. இப்போது மேலும், 3 கோடி மக்கள் பயன்படுகிற வகையில் திட்டங்கள் நிறைவேற்ற ப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் எஸ்.சதாசிவம் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தத் திட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

# விவசாயிகள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்!

## பஞ்சாப்பில் விவசாயிகள் ரயில் மறியல் !

பாட்டியாலா, பிப். 16 –

டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து விவசாயிகள் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, டெல்லியை முற்றுகையிடும் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

டெல்லி நோக்கி சென்ற விவசாயிகளை போலீசார் தடுத்து நிறுத்தி வருகின்றனர். விவசாயிகள் டெல்லிக்குள் நுழைய முடியாதபடி தடுப்புகளை ஏற்படுத்தியுள்ள காவல்துறையினர், விவசாயிகள் மீது தண்ணீரை பீச்சி அடித்தும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

காவல்துறையின் இந்த அராஜக போக்கிற்கு கண்டனம் தெரிவித்து நேற்று ரயில் மறியல் மற்றும் சுங்கச் சாவடி முற்றுகை போராட்டத்தை விவசா யிகள் அறிவித்து இருந்தனர்.

அதன்படி பஞ்சாப் மாநிலத்தில் பாட்டியாலா, ராஜ்புரா உள்ளிட்ட இடங்களில் விவசாயிகள் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தண்டவாளங்களில் அமர்ந்து ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கங்களை எழுப்பி வருகின்றனர்.

### கழக அரசில் ஏழை எளிய, நடுத்தர மக்களின் நலத்திட்டங்களுக்காகவே கடன் வாங்கப்பட்டது!

# நாங்கள் முறையாகக் கடன் வாங்கினோம்; மக்களுக்குத் தொண்டு செய்தோம்!

## சட்டப் பேரவையில் - அமைச்சர் எ.வ. வேலு விளக்கம்!

**சென்னை, பிப். 16- சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது குறுக்கிட்ட, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ. வேலு, “கழக அரசில் நாங்கள் முறையாகக் கடன் வாங்கினோம். மக்களுக்குத் தொண்டு செய்தோம்!” என்று விளக்கமளித்தார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டு என்ற அடிப்படையில் தன்னுடைய பேச்சை அமைத்துக்கொள்ளாமல், அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன் என்பது ஒரு நல்ல ஜனநாயக கலாச்சாரம். அதில் எந்த மாற்றமும் இல்லை. சட்டசபை ஜனநாயகம் என்றுகூட சொல்லலாம்.

அதே நேரத்தில் அம்மையார் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, முதன்முதலில் 45,000 கோடி ரூபாய் கடன் வாங்கியவர்களே அவர்கள்தான். அவருடைய ஆட்சியில்அதற்குப் பிறகுதான் 2006ல் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அப்போது எஞ்சியிருக்கிற 55 ஆயிரம் கோடி ரூபாயைக் கடன் வாங்கினார்கள். அதனால், தி.மு.க. ஆட்சியைவிட்டுப் போகிறபோது 1 இலட்சம் கோடி ரூபாய் என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள்.

இந்த 1 இலட்சம் கோடி ரூபாயில், 45,000 கோடி ரூபாய் என்பது அம்மையார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்டது, ஒன்று. 55,000 கோடி ரூபாயை வாங்கி, ஊதாரித்தனம் எல்லாம் கலைஞர் ஒன்றும் செய்யவில்லை. அப்போதுதான் கிராமத்தில் இருக்கிறவர்கள், குடிசைகளில் இருக்கிறவர்கள், TV பார்க்காதவர்கள் எல்லாருக்கும், தமி ழ்நாட்டில் இருக்கிற 2 கோடி பேருக்கு எல்லா வீட்டுக்கும் TV கொடுத்தோம்.

அதோடு மட்டுமல்ல, இந்தியாவிலே பல மாநிலங்கள் இருந்தது. விவசாயிகளுக்கு எல்லாம் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற நிலை வந்தபோது எந்த மாநிலமும் தள்ளாதபோது தலைவர் கலைஞர் அவர்கள் 7 ஆயிரம் கோடி ரூபாயை அன்றைக்கு கூட்டுறவுக் கடனிலே தள்ளுபடி செய்தார்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) அப்போது NABARD என்ன சொன்னார்கள் என்றால், “எங்கள் அனுமதி இல்லாமல் நீங்கள் எப்படி கடனைத் தள்ளுபடி செய்யலாம். நாங்கள் தான் கடன் கொடுத்தவர்கள்” என்று சொன்னபோது அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார், “என்னுடைய மாநில நிதியிலிருந்து உங்களுக்கு மொத்தப் பணத்தையும் நான் கட்டுகிறேன்” என்று சொன்னார்.

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அந்தக் காரியத்தைச் செய்தார்.

ஒரு எம்.பி. இருக்கிறார் என்று சொன்னால் அவரிடம் 20 coupons இருக்கும். எம்.பி. ஆக இருந்தவர்களுக்கு எல்லாம் தெரியும் 20 coupons இருக்கும். அந்த 20 coupons வாங்கிதான் gas அடுப்பு வாங்க வேண்டிய நிலை இருந்தது.

ஆனால், அதை மாற்றி முதலமைச்சர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்கெல்லாம் நேரடியாக 23 இலட்சம் gas அடுப்புகளை இலவசமாகக் கொடுத்தார் என்பது அந்தக் காலகட்டம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, 55,000 கோடி ரூபாய் கடன் இடைப்பட்ட காலத்தில் வாங்கியிருந்தாலும் கூட, மக்கள் நலன் கருதி பல காரியங்கள் தமிழ்நாட்டில் ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு நடைபெற்றது. அதனால் கடன் வாங்கப்பட்டதேயொழிய, அரசிற்கு அந்தப் பணத்தை மாற்றிவிட வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே வாங்கப்பட்ட கடன் அல்ல. அதனால் வாங்கிய கடனை முறையாக நாங்கள் வாங்கினோம்; மக்களுக்குத் தொண்டு செய்தோம்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் சிறப்புரையாற்றினார்.

## சட்டமன்றத்தில் உரையை வாசிக்க மறுப்பதற்கு

# ஆளுநருக்கு எந்த அதிகாரமும் கிடையாது!

சட்டப்பேரவை ஆளுநர் உரையோடு தொடங்குவது என்பது மரபும் மாண்புமாக நாம் கடைப்பிடித்து வரக்கூடிய நடைமுறை. ஆனால், உச்சநீதி மன்றம் சமீபத்தில் பஞ்சாப் மாநிலத்தில் ஆளுநர் குறித்து வழங்கிய தீர்ப்பில் பஞ்சாப்பில் என்ன நடந்தது என்றால், ஆளுநர் உரையோடு கூட்டம் நடைபெறவில்லை. அதனால் அந்த மசோதாக்களுக்கு நான் கையெழுத்துப் போட மாட்டேன், அப்படி என்று கூறி ஆளுநர் மறுத்தார். உரை வாசிக்கிறீர்கள், வாசிக்க மாட்டேன் என்கிறீர்கள் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல, மசோதாக்களுக்கு கையெழுத்துப் போட்டே ஆக வேண்டும். அது சட்டமன்றத்தின் இறையாண்மை தொடர்பானது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இங்கே பேசியவர் குறிப்பிட்டதைப் போல, அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் உறுதிமொழி எடுத்துக் கொள்பவர்கள் யார் என்றால், இந்தியப் பிரதமர், மாநிலங்களின் முதல்வர்கள், யூனியன் பிரதேச முதல்வர்கள் - இவர்கள் எல்லாம் இந்தியாவின் இறையாண்மை பாதுகாவலர்கள். ஏன் இவர்கள் இறையாண்மை பாதுகாவலர்கள். இறையாண்மை என்பது என்ன?

**இந்தியாவின் மக்களாகிய நாம் நமக்கு நாமே வகுத்துக் கொண்ட, நாமே உருவாக்கிக் கொண்ட, இந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்பால் நின்று நடப்போம் என்று எடுத்துக் கொண்ட உறுதி மொழிதான் இறையாண்மையை வெளிப்படுத்துவது. அப்படி என்றால் இறையாண்மையை உருவாக்குவது மக்கள். அந்த மக்களிடம் இருந்து இறையாண்மையை காப்பவர்களாக இருப்பவர்கள் இந்தியாவின் பிரதமர், மாநிலங்களின் முதலமைச்சர்கள், இவர்கள்தான் இறையாண்மையை பாதுகாப்பவர்கள். அப்படி என்றால் இறையாண்மையைப் பற்றி பேசுவதற்கு ஆளுநருக்கு எந்த அதிகாரமும் கிடையாது.**

**அது முழுக்க சட்டப்பேரவையைச் சார்ந்தது, நாடாளுமன்றப் பேரவையைச் சார்ந்தது. இரண்டாவது, ஆளுநர் இன்றைக்கு உரையை படிக்காமல் புறக்கணித்து இருக்கிறார். இது இந்தச் சட்டப்பேரவைக்கு அவர் என்ன மரியாதை கொடுத்திருக்கிறார். இந்த இறையாண்மை பொருந்திய உறுப்பினர்களுக்கு, இறையாண்மை பொருந்திய அரசுக்கு ஆளுநர் என்ன மரியாதையைக் கொடுக்கிறார் என்பதை இது வெளிப்படுத்தி இருக்கிறது.**

ஆளுநர் சமீபத்தில் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளால் மிகவும் பாதுகாப்பற்ற நிலைக்கு ஆளாகி இருக்கிறார் என்று நினைக்கிறேன். நாடாளுமன்றத்தில் வில்சன் இரண்டு மூன்று மசோதாக்களை கொண்டு வந்தார். அதில் ஒன்று ஆளுநர்களுக்கு கோப்புகளை கையாள கால அளவை நிர்ணயிக்க வேண்டும் என்பதற்காக ஆர்ட்டிக்கல் 200-ஐ அமல் செய்ய வேண்டும் என்பது.

அடுத்து ஆர்ட்டிக்கல் 157 ஆளுநர்களை நியமிக்கையில் அரசாங்க அதிகாரிகள், அரசு பொறுப்பில் இருந்தவர்களை ஆளுநராக நியமிக்கக் கூடாது, கூடுதலாக அவர்கள் அரசாங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றால் -10 வருடத்திற்கு அவர்களுக்கு எந்தப் பதவியும் கொடுக்கக் கூடாது. ஆளுநராக நியமிக்கக் கூடாது. இந்த பில் நம்பர் 2.

அடுத்து பில் நம்பர் 3 -ஆர்ட்டிக்கல் 361 இந்தியாவின் குடியரசுத் தலைவர், ஆளுநர்கள் மற்றும் ராஜபிரமுகர்களுக்கு எதிராக கிரிமினல் புரோஷிடன்ஸ் இன்வெல்ப் செய்யக் கூடாது. அப்படி என்று எதிர்ப்பு சக்தி ஒன்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த எதிர்ப்பு சக்தியைத்தான் இந்த ஆளுநர்கள் அனுபவித்து கொண்டிருக்கிறார்கள். எதற்காக இந்த எதிர்ப்பு சக்தி? ஆளுநர்களுக்கு அது தேவை இல்லை என்று மூன்று தனி நபர் மசோதாக்கள் தாக்கல் செய்திருக்கிறார் பி.வில்சன்.

இந்த ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவரிடம் மனு கொடுக்கப் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தி.மு.க., வி.சி.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்த முறையில் கொடுத்து இருக்கிறார்கள். அதனால் அவர் மிகவும் Insecure (பாதுகாப்பற்றவராக) மாறி இருக்கிறார் என்று நினைக்கிறேன்.

**இதே ஆளுநரே இங்கே இருக்கட்டும் என்று முதல்வர் ஏன் கூறினார் என்றால், இப்போதும் ராஜ் பவனுடைய ட்விட்டர் பக்கத்தைப் பாருங்கள், 6ஆம் தேதி மே மாதம் 2023 இல் அவர் 'டைம்ஸ் ஆப் இந்தியா'விற்கு கொடுத்த ஒரு பேட்டியை பின் செய்து வைத்திருக்கிறார்.**

**அதில் தெரிவித்த ஒரு அரசியல் கருத்தைத்தான் அவர் அந்தப் பக்கத்தில் வைத்திருக்கிறார்.**



பத்திரிகையாளர்
**இந்திர குமார் தேரடி**

**ஆர்.என்.ரவியின் தனிப்பட்ட பக்கத்தில் இதனை பின் செய்யவில்லை, நாளைக்கு எந்த ஒரு ஆளுநர்கள் வந்தாலும் இந்த ராஜ் பவன் தமிழ்நாடு பக்கத்தைத் தானே பயன்படுத்துவார்கள்.**

இப்படி அரசியல் கருத்தை ஆளுநர் வெளிப்படுத்தி இருக்கும் போது, இவர் அரசியல் பேசுகிறார், இவர் மூலமாக நாம் திருவள்ளுவரை மீண்டும் பேசலாம், சனாதனத்திற்கு எதிரானக் கருத்துக்களைப் பற்றி மீண்டும் பேசலாம், வள்ளலாரை மீண்டும் பேசலாம். திராவிட இயக்க சித்தாந்தங்களைப் பற்றி பேசலாம் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஒரு அரசியல் நிலைப்பாட்டை எடுக்கலாம்.

முதன் முதலில் அரசியல் நிலைப்பாட்டை எடுத்தது ஆளுநர். அதற்குப் பிறகுதான் அரசியல் நிலைப்பாட்டை எடுப்பதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தள்ளப்படுகிறார். அந்த இடத்தில் எந்த முதலமைச்சர்கள் இருந்தாலும் இந்த நிலைப்பாட்டைத் தான் எடுத்து இருப்பார்கள்.

அவர் இந்த அவையினுடைய கண்ணியத்தை கருதி இதனை வெளியிட்டேன் என்று சொல்கிறார். இந்த நாட்டினுடைய கண்ணியத்துக்கு எதிரானவர் ஆளுநர். அவர், காந்தி எல்லாம் சுதந்திரத்திற்காகப் பெரிதாக போராட வில்லை. 1942 க்குப் பிறகு காந்தி பின்தங்கி விட்டார், நேதாஜி தான் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார் என்று கூறியிருக்கிறார்.

இவர்கூறிய 1942 க்கு அடுத்த வருடம் 1943 மகாத்மா காந்தி பெருமகனாரின் 74 வது பிறந்த நாள் விழாவில் பேங்காங்கில் இருந்து நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பேசுகிறார், "இது போன்ற ஒரு சூழ்நிலையில் எந்த ஒரு தனி மனிதனும் தன்னுடைய ஒற்றை வாழ்நாளில் - தன்னுடைய ஒற்றை வாழ்க்கையில் இப்படியான சாதனைகளை நிகழ்த்திவிட முடியாது", என்று மகாத்மா காந்தியைப் பற்றி கூறியிருக்கிறார்.

நேதாஜி அவர்கள் இந்திய ஆர்மியை வடிவமைத்தவர், அந்த வடிவமைப்புக்கு அவர் கொடுத்த பெயர்- பட்டம் காந்தி பிரிகேட், நேரு பிரிகேட், ஆசாத் பிரிகேட் , இப்படி எந்தக் காலக்கட்டத்திலும் காந்தியைப் பற்றி சமரசம் இல்லாமல், காந்தியை ஆதரித்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸை, காந்திக்கு எதிராக நிப்பாட்டி இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை முதலில் கொச்சைப்படுத்தினார்.

அதற்கு முன்பு சிதம்பரம் நடராஜர் கோவிலில் பாலியல் ரீதியான பிரச்சினைகள் நடைபெற்று இருக்கிறது, அங்கே குழந்தைகளுக்கு திருமணம் நடைபெற்று இருக்கிறது, அந்த உண்மையை இவர் மறுத்துள்ளார். அங்கே ஆளுநர் என்ன சொன்னார்? டூ பிங்கர் டெஸ்ட் செய்தார்கள் என்று கூறினார்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மருத்துவத் துறையையும் இழிவுப்படுத்தி பேசிவிட்டு, இன்றைக்கும் ராஜ்பவனில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அப்படி சொன்னதற்கு அவரிடம் ஆதாரம் இருக்கிறதா? மருத்துவர்கள் இப்படி செய்யவில்லை என்பதை அவர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். அந்தப் பெற்றோர்களின் குழந்தைகள் உறுதிப் படுத்துகிறார்கள், ஆனால் சின்னக் குழந்தைகள், கழுத்தில் தாலியோடு பால் சொம்போடு முதலிரவு அறைக்குள் செல்லும் போட்டோக்கள் 'லீக்' ஆகி இருக்கிறது. அதனை போலீஸ் கைப்பற்றி அதன் அடிப்படையில் தான் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அதனை பொய் என்று ஆளுநர் ரவி பேசி இருக்கிறார்.

இப்படி தமிழ்நாட்டின் மரபுகளுக்கு எதிராக ஆளுநர் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு அப்பாவு அவர்கள் இரண்டு பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களின் வாரிசுகள் என்று கூறினார். அந்த இரண்டு பேரில் ஒரு பெயரை ஆளுநர் கூறிவிட்டார். தன்னுடைய அறிக்கையில். அவருடைய வாரிசு என்று சொல்கிறார்கள் என்று, இன்னொரு பெயரை விட்டு விட்டார். அந்த இன்னொரு பெயர் எப்படிப்பட்ட பெயர் என்றால், இந்த நபர் காந்தியின் கொலைக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என்று அவரை ரவுண்டு செய்து தொப்பி போட்டவர் விடுவிக்கப்பட்டார் -என்று காட்டுகிறார்.

இதில் அப்படிப்பட்டவருடைய பெயரை ஆளுநர் சொல்லாமல் விட்டு விட்டதற்கு அவரை ஆளுநர் நேசிக்கிறாரா? என்ற கேள்வி வருகிறது. இப்படி அரசியல் பேசும் ஆளுநரை கேட்கும் போது அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக ஆளுநர் என்கின்ற செட்டப்பை இந்தியா முழுவதும் இன்றைக்கு எப்படி பயன்படுத்துகிறார்கள் என்றால், வட இந்தியாவில் பஞ்சாப்பிலும் இப்படித்தான் நடக்கிறது. அங்கே பன்வாரிலால் புரோகித் என்ன செய்துகொண்டு இருக்கிறார். அதற்காக பன்வாரிலாலுக்கும், தமிழ்நாடு ஆளுநருக்கும் உச்சநீதிமன்றம் நறுக் நறுக் என்று கொட்டு வைத்து இருக்கிறது. நீங்கள் செய்வதெல்லாம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானதாக இருக்கிறது என்று கொட்டு வைத்து இருக்கிறது. அவர்கள் செய்த செயல்கள் எல்லாம் முரணாக இருக்கின்றன. "சரியான நடவடிக்கை எங்கே? நாங்கள் கண்டிக்கும் அளவிற்கு போய்விடாதீர்கள், பெரிய பிரச்சினையை நோக்கி அழைத்துக் கொண்டு போகிறீர்கள்" என்று உச்சநீதிமன்றம் முடித்து இருக்கிறது.

**இந்தப் பிரச்சினை இப்போது எங்கே போய் நிற்கும்? இந்த ஆளுநர் பொறுப்பை வைத்துக் கொண்டு இவர் ஆட்டம் போடுகிறார், தமிழ்நாட்டு மசோதாவுக்கு கையெழுத்துப் போட மாட்டேன், நான் உரையை படிக்க மாட்டேன் என்று முதலில் இவருக்கு உரையில் மறுப்பு தெரிவிப்பதற்கு எந்த உரிமையும், அதிகாரமும் கிடையாது, அவர் அதற்கு ரெக்கமெண்ட் செய்யலாம், இவற்றில் இவையெல்லாம் சேர்த்துக் கொள்ளலாம், இவையெல்லாம் நீக்கலாம் என்று அவர் பரிந்துரை செய்யலாம். அவர் கொடுக்கும் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளும் பொறுப்போ, கடமையோ, உரிமையோ அரசுக்குக் கிடையாது. இதனை நான் சொல்லவில்லை உச்சநீதிமன்றம் சொல்கிறது.**

சமூக நீதி, அரசியல் சமத்துவம், சமூக நல்லிணக்கம், இதனைத்தான் அவர் தவறு என்று சொல்கிறார். இப்படித்தான் ஒன்றிய அரசு நடந்து கொண்டு இருக்கிறது. அதன் கீழ் இருக்கின்ற ஒரு மாநிலம் எப்படி மத நல்லிணக்க மாநிலமாக இருக்கும். எப்படி சமூக நீதி மாநிலமாக இருக்கும்?

இப்படி ஆளுநர் தொடர்ந்து செய்து கொண்டிருக்கக் கூடிய இந்தச் செயல், தமிழ்நாட்டின் நீண்ட கால கோரிக்கைக்கு வலு சேர்ப்பதாக இருக்கிறது. "தமிழ்நாடு சட்டப் பேரவை நிறைவேற்றிய தீர்மானம் ஆளுநர் என்னும் ஆட்டுத் தாடி இன்னமும் நாட்டிற்குத் தேவையா? அதனை துடைத்தெறிய வேண்டிய காலம் வந்து விட்டது" என்று 1974 இல் தீர்மானம் கொண்டு வந்ததை இன்றைக்கும் ஆளுநர் நினைவுப்படுத்திக் கொண்டிருக்கிறார். இதனை நாம் மட்டும் சொல்லவில்லை ஹெச்.வி. காமத் என்று ஒருவர் இருந்தார். ஹெச்வி. காமத் எப்படிப்பட்டவர் என்றால் காஷ்மீர் சட்டமன்றத்தில் கடவுள் வாழ்த்து வேண்டும் என்று கேட்டவர். அவர் சொல்கிறார். கிட்டத் தட்ட இவர்களுடைய நபர்தான், அவர் சொல்கிறார், இந்த கவர்னர் என்ற பொறுப்புக்கு நீங்கள்அதிகாரத்தை கொடுத்து இருக்கீர்கள். அரசுக்கு லட்டர் கேட்டு வாங்குவது, அரசு தானா போய் லட்டர் கொடுக்கிறது என்ற அதிகாரத்தை எல்லாம் ஆளுநருக்கு கொடுத்து இருக்கீர்கள், இவையெல்லாம் எந்த அர்த்தத்தில் கொடுத்து இருக்கிறீர்கள்? என்று கேட்டு இருக்கிறார்.

இது இரட்டை மாட்டு வண்டியை இரண்டு திசைகளிலும் பூட்டிக் கொண்டு எந்தப் பக்கமும் இழுபடமுடியாத நிலையை ஏற்படுத்துமே தவிர நல்ல முடிவு எடுக்காது, என்று அரசியலமைப்புச் சட்டத்திலேயே ஹெச். வி.காமத் குறிப்பிட்டு இருக்கிறார், அதனை தமிழ்நாட்டு ஆளுநர் இன்றைக்கு மெய்பித்துக் கொண்டிருக்கிறார்.

ஆளுநர் ஒட்டுமொத்தமாக இந்த உரையை புறக்கணித்ததின் மூலம் என்ன சொல்ல வருகிறார்? என்ற சந்தேகம் இருக்கிறது. நேற்றைக்கு தமிழ்நாட்டில் அண்ணாமலை மற்றும் ஜெ.பி. நட்டா ஆகியோர் ஒரு கூட்டம் போட்டார்கள். 200 வது என் மண் என் மக்கள் யாத்திரை என்று நினைக்கிறேன். நேற்று இரவு அது பெரும் பேசும் பொருளாக வளர்ந்து விடுமோ? என்கிற பயத்தில் இப்படியான முடிவை அவர் எடுத்து இருக்கிறாரோ? என்கின்ற சந்தேகம் எனக்கு இருக்கு.

**– 'நியூஸ் 7' தொலைக்காட்சி 'கேள்வி நேரம்' விவாதம்**

---

## உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்கள் கொண்ட ஆலோசனைக்குழு

# மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்காற்றிக் கொண்டிருக்கிறது!

## சட்டப் பேரவையில் - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

**சென்னை, பிப்.16-**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பங்கேற்று உரையாற்றுகையில் குறுக்கிட்ட நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு "உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்களைக் கொண்ட "பொருளாதார ஆலோசனைக் குழு" மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சிறந்த பங்காற்றிக் கொண்டிருக்கிறது" என்று விளக்கமளித்தார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் தங்கம் தென்னரசு, இதுகுறித்து குறிப்பிட்டதாவது:-

அமைச்சர் தங்கம் தென்னரசு: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவிப்பது நம்முடைய அரசு அறிவித்திருக்கக்கூடிய பொருளாதார நிபுணர் குழு என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்திற்கான முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக அறிவிக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு குழு.

1 trillion dollar economy by 2030 என்று சொன்னால் அதற்கான வழிமுறைகள் என்ன இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை எந்தளவிலே உயர்த்த வேண்டும் என்பதற்காகத் தான் அது முழுமையாக அந்தக் குழு நமக்குப் பல்வேறு இடங்களிலே ஆலோசனைகள் வழங்கியிருக்கிறது.

மிக வெற்றிகரமாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்குக் கூட அது எவ்வளவு தூரத்திலே சிறப்பான வகையிலே கொடுக்கமுடியும்; (மேசையைத் தட்டும் ஒலி)

யாருக்கெல்லாம் அந்த உரிமைத் தொகை போய்ச் சேர வேண்டும் என்பது முதற்கொண்டு அந்தக் குழு மிக நல்ல ஆலோசனைகளை நமக்கு வழங்கியிருக்கிறது.

உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்கள் அதிலே இடம் பெற்று இந்த மாநிலத்தினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அந்தக் குழு தன்னுடைய பங்காற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கடன் பெறுவதைப் பொறுத்தமட்டிலே, கடன் வாங்குவது என்பது credit economy என்பது மிக முக்கியமான ஒன்று. தனி நபர் கடன் வழங்குகிறோம்; சுய உதவி கடன் வழங்குகிறோம்; ஒரு இடத்திலே கடன் வாங்குவது என்பது கடன் வாங்குவதன் மூலமாக எப்படி பொருளாதாரம் உயருகிறது என்பதிலே, அதில் ஒரு மிக முக்கியமான பங்கு. அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலே நாம் பெறக்கூடிய கடன்கள் என்பது அரசாங்கத்தினுடைய நிதி எந்தளவிலே செலவிடப்படுகிறது. குறிப்பாக, மூலதன செலவிலே (capital expenditure) எந்தளவிலே அது வருகிறது; திட்டங்களுக்கு எந்த அளவிலே நாம் கொடுக்கிறோம் என்பதுதான் மிக முக்கியம்.

அரசாங்கம் கடன் பெற்றிருக்கிறது என்று சொன்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது கூட சொன்னார்கள், வரக்கூடிய கோடையைச் சமாளிக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் மின் உற்பத்தியைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

ஒன்றிய அரசிடமிருந்து எந்தவிதமான ஒரு பெரிய அளவிலும் நமக்கு support வரவில்லை. நம்முடைய பெரிய திட்டங்கள் மெட்ரோ இரயில் திட்டத்திற்கு முழுமையாக இப்போது தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசின் திட்டங்களாக சொல்லப்படக்கூடிய திட்டங்களிலே கூடவீடு வழங்கக்கூடிய திட்டங்களிலே கூட நம்முடைய பங்கு அதிகமாக இருக்கிறதேயொழிய ஒன்றிய அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கிறது.

ஆக 15 இலட்சத்திற்கு நகர்ப்புறத்திலே வீடு கட்டுகிறார்கள் என்று சொன்னால் அதிலே ஏழரை இலட்சம் ரூபாய் நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆக, இத்தகைய திட்டங்களுக்கு நாம் அதிகளவிலே செலவழிக்கக்கூடிய காரணத்தினால் கடன் பெறுவது என்பதும் இயற்கையான ஒன்றாக அது அமைந்திருக்கிறது. அது உங்கள் ஆட்சிக் காலத்திலும் வாங்கியிருக்கிறீர்கள். இப்போது எங்கள் ஆட்சிக் காலத்திலும் வாங்கியிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

---

## மனித விலங்கு மோதல்களைத் தடுக்க

# 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் - யானைபுகா அகழிகள் அமைத்து நடவடிக்கை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் டாக்டர் பா.மதிவேந்தன் தகவல்!

**சென்னை, பிப். 16-**

**சட்டப்பேரவையில் கேள்வி - நேரம் பகுதியில் பதிலளித்த அமைச்சர் டாக்டர் பா.மதிவேந்தன், மனித விலங்கு மோதல்களைத் தடுக்க 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் அமைத்தும், யானைபுகா அகழிகள் அமைத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.**

**சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் டாக்டர் பா.மதிவேந்தன் அளித்த பதிலும் வருமாறு:-**

**P.R.G.அருண்குமார்:** (அ) கவுண்டம்பாளையம் தொகுதி, ஆனைகட்டி மற்றும் பெரியநாயக்கன் பாளையம் ஆகிய பகுதிகளில் வனவிலங்குகள் வருவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன்:** ஆனைகட்டி, பெரியநாயக்கன்பாளையம் பகுதிகளில் வனவிலங்குகள் வருகையைத் தடுக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மனிதவிலங்கு மோதல்களைத் தடுக்க 3 சிறப்பு இரவு ரோந்து குழுக்கள் அமைத்தும், யானைபுகா அகழிகள் அமைத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**P.R.G.அருண்குமார்:** காட்டுப் பன்றிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த, பஞ்சாயத்து நிர்வாகமே சுட்டுக் கொல்லலாம் என கேரள அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, கேரள அரசைப் போன்றே, தமிழ்நாடு அரசும் காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன்:** கோவை வனக் கோட்டத்தின் முக்கியப் பிரச்சினையாகவும், தினசரி நிகழ்வாகவும் மனிதவிலங்கு மோதல்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. இந்நிகழ்வுகள் ஏற்படாமல் தவிர்க்கும் வகையில், வேட்டைத் தடுப்புக் காவலர் மற்றும் யானை விரட்டும் காவலர் அடங்கிய 3 சிறப்பு இரவு ரோந்துக் குழுக்கள், Alpha, Beta, Gamma என்ற பெயரில் அமைக்கப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி குழுக்களில் உள்ள 16 பணியாளர்கள் தினசரி மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரை தொடர் வன விலங்குகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும், தற்போது கூடுதலாக பெரியநாயக்கன்பாளையம் வனச் சரகத்திற்கு 6 பணியாளர்கள் மற்றும் காரமடை வனச் சரகத்திற்கு 6 பணியாளர்கள் வீதம் வன விலங்குகள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதைத் தவிர, காவல் துறை, மின்வாரியப் பணியாளர்களுடன் வனத் துறைப் பணியாளர்கள் இணைந்து antidepredation committee ஒன்று அமைக்கப் பட்டு, மனிதவிலங்கு மோதல்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மேலும், பெரியநாயக்கன்பாளையம் வனச் சரகத்தில், வன விலங்குகளின் நடமாட்டம், வன விலங்குகளின் குணாதிசயம், பயிரிடும் முறையில் செய்ய வேண்டிய மாற்றம் மற்றும் தோட்டங்களின் மாற்றம் குறித்து தொடர்ச்சியாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டு வருகிறது. மேலும் ஒரு புதிய முயற்சியாக 'Thadam' என்னும் WhatsApp குழு ஒன்று அமைக்கப் பட்டு, அதில் யானைகள் நடமாட்டம் குறித்து தகவல் பகிரவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதைத் தவிர, கூடுதலாக இந்த நிதியாண்டில் 3 கி.மீ. தூரத்திற்கு யானைபுகா அகழிகள் பராமரிக்கப் பட்டு, சூரிய மின்சக்தியில் இயங்கும் குடிநீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.

யானைகளின் உணவுத் தேவையை வனத்திலேயே பூர்த்தி செய்யும் பொருட்டு NABARD திட்டத்தின்கீழ் சுமார் 25 இலட்சம் செலவில் 20,000 நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதைத்தவிர, 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளில் மனித விலங்கு மோதலைத் தடுக்க 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.41 இலட்சம் மதிப்பீட்டில் யானை புகா அகழிகள் மற்றும் 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின் சக்தி வன உயிரின குடிநீர்த் தொட்டிகள் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் யானைகளைப்பற்றி கேட்டார். இத்தனை நடவடிக்கைகள் இந்த அரசால் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை விரிவாகச் சொன்னால்தான் புரியும். இதைத்தவிர, சில உயிரிழப்பு ஏற்பட்டால் நிவாரணமாக கடந்த ஆட்சியில் 4 இலட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அதை அதிகப்படுத்தி 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தினார்கள். கடந்த இரு மாதங்களுக்கு முன்பு போன மாதம் ரூ.5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி கூடிய விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுப்பன்றிகளைப் பொறுத்தவரையில், கேரள மாநிலத்தில் order வாங்கியதுபோன்று, தமிழகத்தில் order வாங்க வேண்டுமென்றுதான் நிறைய பேர் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். Wildlife Protection Act, 1972 வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன்படி, வன விலங்குககளை 6 விதமாக ஒரு அட்டவணை செய்து Schedule I to Schedule VI வரைக்கும் வைத்திருக்கிறார்கள். ஆனால், இப்போது அந்த Scheduleல் கடந்த ஏப்ரல் மாதம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் டாக்டர் பா.மதிவேந்தன் பதிலளித்தார்.




**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

இ.பொ.து.ந.க.எண்.பி1 / 277 / 2023 குறுகிய கால மின்னணு இரண்டு உறை முறையில் திறந்த வெளி (**Online Open e-Tender** ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

மேற்பார்வை பொறியாளர், இயந்திரப் பொறியியல் துறை (அச்சகம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு திறந்தவெளி **(Open e-Tender)** ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறை அச்சகம், வருவாய் துறையின் சொத்துவரி அட்டை (Smart Card) with QR Code 13.53 இலட்சம் எண்ணிக்கையில் அச்சடித்து வழங்கும் பணி**

**மொத்தப்பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.1,51,70,000/-**
**முன் வைப்புத் தொகை ரூ.1,52,000/-**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் 23.02.2024 மற்றும் நேரம் **அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் 24.02.2024 மற்றும் நேரம் **அன்று மாலை 3.30 மணி.**

மேலும் விவரங்களுக்கு : **(http://tntenders.gov.in)** மற்றும் **www.chennaicorporation.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 984 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**மேற்பார்வை பொறியாளர் (இ)**


---

## "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில்

# கன்னியாகுமரி தொகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் அறிக்கை!

குமரி, பிப். 16-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்டெடுக்க கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குரலாக "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்! என்ற தலைப்பில் கன்னியாகுமரி நாடாளுமன்ற தொகுதிக்கான பரப்புரை கூட்டம் இன்று (16.02.2024-வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில்,



அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு நடைபெற உள்ளது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாட நூல் கழக தலைவரும், கொள்கை பரப்பு செயலாளருமான திண்டுக்கல் ஐ. லியோனி, பால்வளத் துறை அமைச்சருமான த. மனோ தங்கராஜ் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

ஆகவே, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA-2 & BLC உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

செய்யாறில் 'சிப்காட்' தொழிற்பேட்டை - திருவண்ணாமலை மாவட்ட இளைஞர்களுக்கு

# வேலைவாய்ப்பு வழங்கிடவே - நிலம் கையகப்படுத்தப்படுகிறது!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

**சென்னை, பிப். 16-**

**சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசும்போது குறுக்கிட்டு விளக்கமளித்த - பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, "திருவண்ணாமலை மாவட்ட இளைஞர்களுக்கு, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடவே, செய்யாறில் 'சிட்காட்' தொழிற்பேட்டை அமைக்கும் பணிக்காகத்தான் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. அங்கு போராடியவர்கள் யாரும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல!" என்று விளக்கமளித்தார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது: -

திருவண்ணாமலை மாவட்டம் என்னுடைய சொந்த மாவட்டம் என்கிற காரணத்தினால் ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. அந்த சிப்காட் இடத்திற்கான நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னது நீங்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் முதன்முதலாக notification வெளியிட்டு இடத்தை எடுங்கள் என்று சொன்னது அந்த அரசுதான். அதற்குப் பின்னால் விரிவாக்கம் செய்யப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தான் இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற உடனேயே, நீங்கள் செய்தது போக தொடர்ந்து அந்தப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்ற அக்கறைத் தன்மையின் காரணத்தினால்தான் இளைஞர்களுக்கு, பட்டதாரிகளுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்கிற அடிப்படையில் தான் அந்த இடத்தைக் கையகப்படுத்த இந்த அரசு முனைப்போடு செயல்படுகிறது.

குறிப்பாக, அதில் 9 ஊர்கள் இருக்கின்றன. அவற்றில் 7 ஊர்களில் இருக்கின்ற விவசாயிகள் முன்வந்து நாங்களே நிலங்களைத் தருகிறோம் என்று சொல்லக்கூடிய நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இரண்டு ஊர்களிலே மட்டும்தான் சிலர் தூண்டுதலின் அடிப்படையில் ஒருசில ஆட்கள் - அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள் எல்லாம் பெரும்பான்மையானோர் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்தவர்களே கிடையாது. ஆனால், அவர்கள் எல்லாம் வெளியிலே இருந்து வந்து வேண்டுமென்றே தூண்டிவிடப்பட்டு ஒரு 50 பேர் உண்ணாவிரதம் என்கிற பெயரிலே உட்கார்ந்தார்கள். அதற்கு பின்னால் தொடர்ந்து அது சிறுகச் சிறுக குறைந்துவிட்டது.

ஆனால், அதேநேரத்தில் அந்தப் பகுதியில் இருக்கிற பட்டதாரிகள், படித்த இளைஞர்கள்-ஏனென்றால் திருவண்ணாமலை மாவட்டத்தில், செய்யாறு தொகுதியில் ஒரு காலத்தில் நிலைமை எப்படி இருந்தது என்று சொன்னால், தினமும் அன்றாட கூலி வேலைக்குப் போனால் கூட 300 ரூபாய் கிடைக்காத அளவிற்குதான் அந்த செய்யாறு தொகுதியினுடைய நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு அங்கு 'சிப்காட்' நிறுவியதன் அடிப்படையில் ஒரு குடும்பத்தில் இருக்கிற பெண்கள் ஒரு மாதத்திற்கு ரூ.20,000 சம்பளம் பெறுகிற நிலையில் இன்றைக்கு பொருளாதாரத்தை மாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் நேரடியாக தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கலாம்.

அதில் வேலை செய்கிற சில பெண்கள் எல்லாம், "கணவனை இழந்துவிட்டேன், இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றன. நான் இந்த சிப்காட்டிலே வேலை செய்வதால்தான் வீடு கட்டி இருக்கிறேன். எங்கள் பெண்களுக்கு எல்லாம் திருமணம் செய்து வைத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள் - இதெல்லாம் உண்மையான நிலைமை இந்த உண்மையான நிலை அறிந்த காரணத்தினால்தான் உங்கள் அரசில் கூட வேலை தரவேண்டுமென்று அந்த முயற்சியில் இறங்கினீர்கள். ஆனால், முழுமையடையாத காரணத்தினால்தான் நாங்கள் இறங்கியிருக்கிறோம்.

ஆனால், அங்கு பெரும்பான்மையான எண்ணம் என்னவென்றால் அவர்கள் யாராவது நிலம் எடுக்கக்கூடாது என்று வெளியூர்க்காரர்கள் யாராவது உட்கார்ந்தார்கள் என்றால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள், பட்டதாரிகள் ஆயிரக்கணக்கானோர் இல்லை, 5,000 பேர் உட்கார்ந்து கொண்டு சிப்காட்டில் நிலம் எடுங்கள், வேலையைக் கொடுங்கள் என்று மாபெரும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதையும் நீங்கள் கேட்டிருக்க வேண்டும் அல்லது டி.வி.-ல் பார்த்திருக்க வேண்டும்.

நிலம் எடுக்கக் கூடாது என்று கூறுபவர்களின் சதவிகிதம் மிகக் குறைவு. நிலத்தை எடுத்து பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று கூறுபவர்களின் சதவிகிதம் 99 ஆக இருக்கிறது.

ஆக, இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவில், நிலங்களைக் கையகப்படுத்துவது, அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்காக அல்ல, இலட்சக்கணக்கான படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்காகதான் இந்த முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோமேயொழிய, விவசாயிகளை வஞ்சிக்கின்ற எண்ணம் ஒருகாலும் அரசிற்குக் கிடையாது.

இரண்டாவதாக, அது குறித்து கைதானவர்கள் யாரும் நேரடி நிலத்திற்குச் சொந்தமானவர்கள் அல்ல, அவர்கள் நிலமே இல்லாதவர்கள். அவர்களிடம் ஒரு சென்ட் நிலம்கூட கிடையாது. ஒரு பச்சைத் துண்டைப் போட்டுக்கொண்டு, சாலையில் அமர்ந்து "விவசாயிகள் நிலத்தை எடுக்கிறார்கள், விவசாயிகள் நிலத்தை எடுக்கிறார்கள்" என்று கூறும் நிலைதான் தற்போது இருக்கிறது. அதன் விவரம் வேண்டுமானால், அனைவரின் முகவரியும் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தருவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில், 45 ஆவது நிகழ்ச்சியாக, வழக்கறிஞர்களுக்கு ஒரு இலட்சம் மதிப்பிலான சட்ட புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி கீரனூர் உரிமையியல் நீதிமன்றத்தில் கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையில், மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ்ராஜா, கீரனூர் வழக்கறிஞர் சங்க தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## பெண்ணாகரம் தொகுதி

# ஒகேனக்கலில் புனல் மின் நிலையம் அமைக்கும் திட்டம்!

## சட்டப்பேரவையில் - நிதி, மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

**சென்னை, பிப். 16-**

**சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது, பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கலில் புனல் மின் திட்டம் அமைப்பது குறித்த வினாவிற்கு நிதி மற்றும் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விரிவான விளக்கமளித்தார்.**



சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு: -

**ஜி.கே. மணி:** பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல்லில் புனல் மின் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** ஒகேனக்கல் நீர்மின் திட்டம் 120 Megawatt (MW) ஒன்றிய அரசுக்குட்பட்ட தேசிய நீர் மின் கழகத்தின்மூலம் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காவிரி நீர்மின் திட்டத்திற்குட்பட்டதாகும். இந்தத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு இசைவுத் தெரிவித்துள்ளது. ஆனால் கர்நாடக மாநிலம் இதற்கு இசைவு அளிக்கவில்லை. ஆகையால் இந்த நீர் மின் நிலையம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள இயலவில்லை.

**ஜி.கே. மணி:** மின்கட்டண உயர்வு இருக்கிற காரணத்தால், செலவு குறைவாகவும், எந்தப் பாதிப்பும் இல்லாத இந்த நீர் மின் நிலையங்கள் மூலமாக உற்பத்தி தேவை என்பதைக் கருத்தில் கொண்டுதான் பெண்ணாகரம் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒகேனக்கல்லில் கனமழை பொழிகிற நேரத்தில் வெள்ளப்பெருக்கு அதிகரித்து வருகிறது. ஆண்டுக்கு 160, 250 TMC தண்ணீர் கடலுக்கு வீணாகச் செல்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் நீர் மின் நிலையங்கள் அமைத்தால் மிக ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் தமிழ்நாடு அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன் வருமா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** மின்சாரத் தேவையைப் பொருத்தளவில் பல்வேறு மின் திட்டங்கள் நாம் தற்போது நிறைவேற்றி வருகிறோம். அது அனல் மின் திட்டங்கள், காற்றாலை மூலமாக இருக்கக்கூடிய மின் உற்பத்தித் திட்டங்கள், புனல் மின் நிலையங்கள் என்று பல திட்டங்களை நாம் உருவாக்கி வருகிறோம். பொதுவாக இன்றைக்கு உலகம் வந்து மரபுசாரா எரிசக்தியை நோக்கி நாம் பயனிக்க துவங்கியிருக்கிறோம். ஒரு புறம் fossil free நம்முடைய power நமக்கு வர வேண்டும். சில மேற்கத்திய நாடுகளில் எல்லாம் பார்த்தீர்கள் என்றால் அனல் மின் நிலையம் போன்று இருக்கக்கூடிய இடங்களில் எங்கு அதிகமான மாசு உற்பத்தியாகிறதோ அங்கு penalty போடக்கூடிய அளவிற்கு போகிறார்கள்.

எனவேதான் புதிய அளவிலே காற்றாலை மின்சாரங்களை உற்பத்திச் செய்யக் கூடிய திட்டங்கள் தற்போது பெருமளவிலே நமக்கு வரக் கூடிய investments பார்த்தீர்கள் என்றால்கூட solar and wind power நம்முடைய தென் தமிழ்நாடுத்தை நோக்கி பெரிய அளவில் இன்றைக்கு நமக்கு industrial investments-ம் வருகிறது. எனவே, தமிழ்நாடு என்பது இந்திய அளவிலே இன்றைக்கு இத்தகைய non conventional energy மரபுசாரா எரிசக்தியை உருவாக்குவதிலே மிக முன்னனியாக இருக்கிறது. குறிப்பாக நீங்கள் சொன்னதைப்போல இப்போது புனல் மின் திட்டங்கள், நம்முடைய புனல் மின் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு இப்போது மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. குறிப்பாக குந்தா நீரேற்று புனல் மின் திட்டம், கொல்லிமலை புனல் மின் திட்டம் இரண்டுமே தற்போது முக்கியமான திட்டங்கள் நடைமுறையிலே இருக்கின்றன.

தற்போது சில நாட்களுக்கு முன்பாக கொள்கை முடிவு எடுத்து இத்தகைய திட்டங் களை உருவாக்குவதற்கு மேல்பவானி நீலகிரி, சாண்டிநல்லா நீலகிரி, சீகூர் நீலகிரி ஆகிய இந்த மூன்று திட்டங்களும் NTPC (National Thermal Power Corporation) மூலமாக செய்வதற்கு அரசு ஒரு ஒப்புதல் அளித்திருக்கிறது. இதுதவிர PPP model (public private partnership) பொதுத் தனியார் கூட்டமைப் பின் மூலமாக 13-12-2023 தேதியிட்ட அரசாணை எண் 106-ன்படி கொள்கை ரீதியிலான ஒரு முடிவினை எடுத்து மேல் பவானி நீலகிரி, சாண்டிநல்லா நீலகிரி, கோதை ஆறு, மணலாறு, ஆழியாறு, வெள்ளிமலை, பாலாறு, பொருந்தலாறு, மஞ்சளாறு, சாத்தாறு, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலே இந்தத் திட்டங்களை அமைப்பதற்கும் அரசு இப்போது அனுமதி வழங்கியிருக்கிறது.

எனவே, புதிய புனல் மின் திட்டங்கள் நீங்கள் கோரியிருப்பதை போல் நிறைய திட்டங்களை எடுத்துக்கொள்வதற்கு அரசால் ஏற்கெனவே ஆவன செய்யப்பட்டுள்ளது.

**ஜி.கே. மணி:** தமிழ்நாடு அரசின் மூலமாகவோ அல்லது தேசிய நீர் மின் கழகத்தின் மூலமாகவோ முத்தரப்பு ஒப்பந்தத்தை, கர்நாடகா மாநில அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு என்று ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தை மேற்கொண்டு, இதை நிறைவேற்றினால், மிக அதிக அளவில், ஏறக்குறைய 1150 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கு புனல் மின்நிலையம் அமைக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அதை அமைச்சர் விரைந்து நிறைவேற்றுவாரா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** அண்ணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இது National Hydro Electric Power Corporation-தேசிய நீர் மின் கழகத்தினுடைய சார்பாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. நீங்கள் சொன்னதைப்போல, 2008 ஆம் ஆண்டிலே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நீங்கள் இந்த அவையிலே எடுத்துச்சொல்லி, அதனடிப்படையிலே, அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் ஒன்றிய அரசின் மூலமாக இந்தத் திட்டம் வந்தது. இந்த முத்தரப்பு ஒப்பந்தம்-Tripartite agreement, ஒன்றிய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் கர்நாடகா அரசு மூன்றிற்கும் சேர்த்து இருக்கக்கூடிய draft agreement ஏற்கெனவே தயார் செய்து கொடுத்திருந்தோம். அதில் தமிழ்நாடு அரசு தனது இசைவைத் தெரிவித்து விட்டது. ஆனால், கர்நாடகா அரசு அதற்கு இசைவு தெரிவிக்காத நிலையில் அப்படியே நிலுவையில் இருக்கிறது.

இந்த Tripartite agreement, draft agreement நிலுவையில் இருக்கின்றபோதே, கர்நாடகா அரசு, Karnataka Power Corporation Limited சார்பாக நாங்களாகவே அந்த இடத்தில் அமைக்கிறோம் என்று சொன்னார்கள்.

சிவசமுத்திரம், ராசிமணல், ஒகேனக்கல் உள்ளிட்டு இருக்கக்கூடிய நான்கு திட்டங்கள் அது. அதில், அவர்கள் சில திட்டங்களைக் கூடுதலாகச் சேர்த்து, அந்தத் திட்டங்கள் இருக்கக்கூடிய இடத்திலே நாங்களாக அதைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு தமிழ்நாடு அரசு ஒத்துக்கொள்ளவில்லை. ஏனென்றால், காவிரி நதிநீர் பிரச்சினை என்பது இரண்டு மாநிலங்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினை. இங்கு புதிய நீர் மின் நிலைய திட்டங்கள் வருமென்றால் அதற்கு தமிழ்நாட்டின் ஒத்திசைவு தேவை என்பதை நாம் வலியுறுத்தியிருக்கிறோம்.

எனவே, அது இல்லாமல் நீங்கள் செய்யக் கூடாது என்று ஒன்றிய அரசின் மின்சாரத் துறைக்கும் நாம் சொல்லியிருக்கிறோம். அதேபோன்று, நீர்வளத் துறைக்கும், வனத் துறைக்கும் இதுகுறித்து தமிழ்நாட்டின் இசைவு இல்லாமல் நீங்கள் எதற்கும் approval கொடுக்கக் கூடாது என்பதையும் நாம் வலியுறுத்தியிருக்கிறோம். இரண்டு மாநிலங்களிடையே இருக்கக்கூடிய பிரச்சினை இது. அந்த இடத்தில் ஒகேனக்கல் நீரிலே மூழ்கக்கூடிய பகுதி இரண்டு மாநிலங்களிலும் இருக்கக்கூடிய காரணத்தினால், இதற்கு ஒரு ஒத்திசைவு வருகிறபோது, நீங்கள் கூறிய திட்டத்தை நாங்கள் எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்கலாம்.


இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# திருப்பத்தூரில் 'உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பொதுக்கூட்டம்!

## அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - எஸ்.ரகுபதி - சிவ.வீ. மெய்யநாதன் சிறப்புரை! அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, பிப். 16 -

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும்,கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-



கழகத் தலைவரும், முதல்வருமான தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் இன்று (16ம் தேதி) முதல் 18ம் தேதி வரை மூன்று நாட்கள் "பாசிசம் வீழட்டும், இந்தியா வெல்லட்டும்" என்ற உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் பரப்புரை கூட்டம் அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும் நடைபெறுகிறது.

இதில் சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி அளவிலான கூட்டம் நாளை (17ம் தேதி - சனிக்கிழமை) திருப்பத்தூரில் நடைபெறுகிறது.

நாளை மாலை 5.00 மணி அளவில் என்.வைரவன் பட்டியில் எனது (கேஆர். பெரியகருப்பன்) தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஐ. பெரியசாமி, புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்த கூட்டத்தில் சிவகங்கை, திருப்பத்தூர், மானாமதுரை, காரைக்குடி, ஆலங்குடி, திருமயம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதி மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முன்னதாக பகல் 2 மணியிலிருந்து 4 மணி வரை கிராமிய நாட்டுப்புற கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது. சிறப்பு பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

## பல மாநிலங்களில் மத்திய படை போலீசார் குவிப்பு! தேர்தல் ஆணையம் நடவடிக்கை!

புதுடெல்லி, பிப். 16 -

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகவே பல்வேறு மாநிலங்களில் மத்திய படையை நியமிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மக்களவை மற்றும் 4 மாநில பேரவை தேர்தல் பணிக்கு 3 லட்சத்து 40 ஆயிரம் பாதுகாப்புப் படையினரை நிறுத்தப்படவேண்டும் என ஒன்றிய அரசிடம் தேர்தல் ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது. தேர்தலை சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடத்த அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், அதிகபட்சமாக 3 ஆயிரத்து 400 சி.ஏ.பி.எஃப். கம்பெனிகளை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என கேட்டு கொண்ட தேர்தல் ஆணையம், நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகவே பல மாநிலங்களில் மத்திய படையை நியமிக்க உத்தரவிட்டுள்ளது.

சட்டீஸ்கரில் 360 கம்பெனி CAPF படையினரும், பீகாரில் 295 கம்பெனியும், உத்தரப் பிரதேசத்தில் 252 கம்பெனியும், ஆந்திரா, ஜார்கண்ட், பஞ்சாப் மாநிலங்களில் தலா 250 கம்பெனி மத்திய படையினரும் நியமித்து உத்தரவிட்டுள்ளதாக பி.டி.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதிகப் பட்சமாக மேற்குவங்கத்தில் 920 கம்பெனி மத்திய படை போலீசார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு

பிப்ரவரி 16 (1978)



கழகம் தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பின்னர், கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், வெளியீட்டுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

1953களில் தீப்பொறி என்ற ஏட்டை சொந்தமாக நடத்தினார். 1959களில் இனமுழக்கம் என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார்.

சிந்தனையை கிளறிவிடும் பேச்சாளர். நாடகங்கள் மற்றும் திரைப்படத்திற்கு உரையாடல்கள் எழுதியிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்கள் சி.பி.சிற்றரசு அவர்களை தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி மேலவைத் தலைவராக தேர்ந்தெடுக்கச் செய்தார்.

1989ல் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு "சிந்தனைசிற்பி சிற்றரசு" பெயரை தலைவர் கலைஞர் சூட்டினார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. காளியப்பன்

பிப்ரவரி 16 (2008)



தி.மு.க. தொடக்கக் கால உறுப்பினராகவும் தொடர்ந்து மாவட்ட பிரதிநிதியாகவும் – நான்குநேரி வட்டக் கழக அவைத் தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் – மூன்று முறை இராதாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் – நெல்லை மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஐந்துமாத சிறைவாசமும் – சட்ட எரிப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.







இடம் : துவாரகா பேலஸ் மதுரை ◆ நாள் : 16.2.24 மற்றும் 17.2.24 ◆ நேரம் : காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை

தி.மு.க இலக்கிய அணி சார்பாக

முத்தமிழ் அறிஞர் கலைஞர்

அவர்களின் நூற்றாண்டு வரலாற்று சிறப்பு புகைப்படக் கண்காட்சி

தலைமை : வி.பி. கலைராஜன், EX MLA

கழக இலக்கிய அணி செயலாளர்

புகைப்படக் கண்காட்சியை துவக்கி வைத்து விழா சிறப்புரை

மாண்புமிகு அமைச்சர்

திரு. P. மூர்த்தி BA அவர்கள்

வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை

மதுரை வடக்கு மாவட்ட கழக செயலாளர்

திரு. கோ.தளபதி MLA அவர்கள்

மதுரை மாநகர் மாவட்ட திமுக செயலாளர்

திரு. மு.மணிமாறன் அவர்கள்

மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

சிறப்பு மிக்க இலக்கிய உரை

திரு. கம்பம் பெ.செல்வேந்திரன் EX MP அவர்கள்

தேர்தல் பிரச்சாரக்குழு செயலாளர்

திரு. நாஞ்சில் சம்பத் அவர்கள்

கொள்கை மாறாத குமரி குணாளர்

திரு. வே.மதிமாறன் அவர்கள்

திராவிட இயக்க எழுத்தாளர்

கலைஞர் நூற்றாண்டு சிறப்பு புகைப்படக் கண்காட்சி வரலாற்றை அறிய

அன்புடன் வருக! வருக!! என அனைவரையும் வரவேற்கும்

புகைப்பட நிபுணர் கோவை சுப்பு

Subbu® FOTOGRAFI

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

# திராவிட சினிமா 45

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

# மாணவனும் ஆனந்தனும்: புறக்கணிப்பும் கவன ஈர்ப்பும்!





படங்கள் உதவி : ஞானம்

'தமிழ்த் திரைப்படங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைத் தடயங்கள்' என்ற ரீதியிலான ஆய்வை மேற்கொள்வதென்பது கடுமையான சவாலுக்குரியது என ஏற்கெனவே பதிவு செய்திருந்தேன். முதல் காரணம் மிக மிக முக்கியமானது. 60களின் இறுதி மற்றும் 70களின் நடுப்பகுதி வரையான தமிழ்த் திரைப்படங்களில் முற்றாக இயல்பான 'பொதுவெளி' ஒன்றின் இருப்பைக் காண்பது அரிதிலும் அரிது. முதலில் இந்தப் பொதுவெளி என்ற பொருண்மையை விளக்கி விடுவது பயன்படும்.

திரைப்படங்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்ட களங்களில் மட்டுமே காட்சிப்படுத்தப்படுவது வாடிக்கை. இதிலொன்றும் பிழையில்லை. ஏனெனில், திரைக்காட்சிக்குத் தேவையானவை மட்டுமே இருப்பதுதான் காட்சியின் நோக்கத்தைத் தெளிவுறக் காட்டும். எனவே, மனிதர்களும் பொருட்களும் வெளிகளும் (சாலைகள், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள், வீட்டுக்கு வெளியே காட்சிப்படும் தெருக்களில் நடமாடுவோர்) திட்டமிட்டே உருவாக்கப்படும்.

ஆட்சி ஒன்றின் சாதனைத் தடயங்களை, இயல்பாக காட்சிக்குள் கொண்டு வருவது இயக்குநரின் நோக்கமாக இல்லையெனில், சாதனைத் தடயங்களின் இருப்பு சாத்தியமில்லை. ஆனால், இயக்குநரின் கவனமான தவிர்ப்பையும் மீறி, அரசின் வெகுமக்கள் நலன் கருதிய திட்டங்கள் காட்சிப்பட்டுவிடும். அதாவது திராவிட மாடல் ஆட்சியின் பலதரப்பட்ட சாதனைச் செயல்பாடுகள் வெளியெங்கும் விரவி நிற்கும் போது, அதனைத் தவிர்த்து விட முடியாமல் போய்விடும்.

## புறக்கணிப்பை மீறித் தெரியும் சாதனை

இன்னொரு வகை திரைப்படங்களில், இவை எண்ணிக்கையில் மிகக் குறைவு என்றாலும், கவனமாக சாதனைகள் காட்சிப்படுத்தப்படும். 60களின் இறுதி தொடங்கி, ஒன்றிரண்டு பாடல் காட்சிகள் சென்னையின் மெரினா கடற்கரை, எழும்பூர் / சென்ட்ரல், அண்ணா சாலை போன்ற களங்களில் காட்சிப்படுத்தப்படுவது தொடங்கியது. அல்லது ஒன்றிரண்டு காட்சிகள் சென்னை நகரின் வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால், அவையும் கட்டுப்படுத்தப்பட்டே காட்சியாகின. படப்பிடிப்பை வேடிக்கை பார்ப்பார்கள் என்று கருதி, மக்கள் நடமாட்டமற்ற வெறிச்சோடிய தெருக்களில் மட்டுமே காட்சியாகின.

> **குடியரசு தின ஊர்வல அரசு சாதனை விளக்க அலங்கார ஊர்தியொன்று, முன்களத்தில் இருக்க, அதைக் கடந்து நகரும் கேமரா, ஊர்தியில் உள்ள, '1972 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்படும் - தமிழ்நாடு மின்சார வாரியம்.' என்ற வாசகத்தைப் போகிற போக்கில் காட்சிப்படுத்தியிருக்கும்.**

இந்த இரண்டு வகைமைக்குமான திரைப்படங்கள் என்று, 1970 ஆம் ஆண்டின் 'மாணவன்' மற்றும் 'அனாதை ஆனந்தன்' ஆகிய இரண்டு படங்களைச் சொல்லலாம். 1970-ஆம் ஆண்டில் வெளிவந்த ஏறத்தாழ 30 படங்களைப் பரிசீலித்ததில் இவைதான் தேறின. ஓர் ஆவலில் எம்.ஜி.ஆர் அவர்களின் 'மாட்டுக்கார வேலன்' (1969) மற்றும் 'தேடிவந்த மாப்பிள்ளை'(1970) படங்களையும் பார்த்தேன். இந்தப் படங்களில், பார்ப்பன 'சோ' ராமசாமி மட்டும்தான் 'தி.மு.க.வின் ஆட்சி / அரசியல்' குறித்த கிண்டலைப் பேச அனுமதிக்கப்பட்டிருந்தார். எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் நீக்கமற இடம் பிடிப்பார் 'சோ' ராமசாமி.

'மாணவன்' திரைப்படத்தின் பிரதான பகுதி 1965 முதல் 1970 ஆண்டுக்கு இடையே நிகழ்கிறது. ஒரு மில் முதலாளி / பண்ணையாரிடம் வேலை செய்து வந்த வேலைக்காரன் ஒருவன் பொறுப்பற்று சூதாடி, பொய்க் குற்றச்சாட்டில் சிறைக்குச் சென்றுவிட, அவனது மகன், தாயின் உழைப்பில் எம்.ஏ. வரை கல்வி கற்று, கல்லூரி ஆசிரியராகி ஒரு நீதிபதியின் மகளையே திருமணம் செய்யும் கதை. ஜெய்சங்கர், லட்சுமி நாயகன், நாயகி. முத்துராமன் வில்லன்.

ஜெய்சங்கரும் முத்துராமனும் ஒரே பள்ளியில் படித்துப் பிறகு ஒரே கல்லூரியிலும் படிக்கிறார்கள். உதவாக்கரை பணக்காரப் பிள்ளையான முத்துராமனுக்கு ஒரு வம்பர் கூட்டம். கல்லூரியில் நாயகன் கடுமையாக உழைத்துப் படிக்கிறான், இவனோ மாணவர் போராட்டம் என்ற பெயரில் ஆசிரியர்களையும், சக மாணவர்களையும் வம்பிழுப்பதே வேலையாக இருக்கிறான்.

1965 இல் நடந்த மாணவர் முன்னெடுத்த மொழிப் போர் முற்றிலுமாகப் பேசப்படவில்லை. மாறாக, மாணவர்கள் போராட்டம் கொச்சைப்படுத்தப்படுகிறது. திராவிடச் சாதனைத் தடயங்களை வசனங்களில் தேடினால், முதலில் காமராஜர் ஆட்சி சாதனை பேசப்படுகிறது. பண்ணையாரிடம் சவால் விடும் தாய் (சவுகார் ஜானகி) 'எம் பிள்ளை படிக்கச் சோறு போட்டுப் பள்ளிக்கூடம் நடக்குது. உன் தயவு தேவையில்லை' எனப் பேசுகிறாள். இந்தக் காட்சிகளின் காலம் ஐம்பதுகளின் இறுதியில். ஏனெனில் 1965 இல் கல்லூரி மாணவனாகி விடுகிறான் நாயகன்.

இப்படியான தேசியம் போற்றிய 'மாணவனில்' எப்படி 'திராவிட மாடல்' ஆட்சி சாதனைத் தடயம் தெரிய இயலும்? அதுதான் கவனமாகத் தவிர்த்தாலும், கவனத்தை மீறிப் பேசப்படும் வசனமும், காட்சி வெளியும். நாயகன் கல்லூரியில் படிக்க அவனை இழிவு செய்ய 'சைக்கிள் ரிக்‌ஷா' ஓட்டியதாக, வில்லன் சொல்ல, அதை உண்மைதான் என்கிறான் நாயகன். கலைஞரின் சாதனையான 'கை ரிக்‌ஷா' ஒழிப்பும் சைக்கிள் ரிக்‌ஷா வருகையும் இங்கே பதிவாகிறது.

இன்னொரு வெளிப்புறப் படப்பிடிப்புக் காட்சியில் காரில் செல்லும் நாயகி, சாலையில் செல்லும் நாயகன் மீது சேற்றைத் தெறிக்க வைத்து விடுகிறாள். நாயகன் அவளைத் தனது சகதியான சட்டையைத் துவைத்துத் தரச் சொல்ல, அழகாகச் சிமெண்ட் கற்களால் கரையமைக்கப்பட்ட கூவம் நதியில் ஓடும் நீரில் வெள்ளைச் சட்டையை அலசி, கரையிலுள்ள தளத்தில் துவைக்கிறாள். இதோ, கலைஞர் அவர்களின் கூவம் நதி சீரமைப்புப் பணி கண் முன்னே தெரிகிறது. இதுதானே கவனத்தை மீறி வெளிப்படும் சாட்சியம்.

## கவனம் ஈர்க்கும் சாதனைக் காட்சிகள்

அடுத்தப் படம் ஏ.வி.எம் / முத்துவேல் பிக்சர்ஸ் தயாரிப்பில் கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில், ஏ.வி.எம்.ராஜன், ஜெயலலிதா நடித்தது. சூழலால் அனாதையாக்கப்பட்ட சிறுவன், சென்னைக்கு வந்து ஒரு களவுக் கூட்டத்தின் சிறுவர் அணியில் சேர்ந்து வாழ்ந்து இறுதியில், தனது உண்மையான தகப்பனுடன் இணையும் கதைக்களம்.

'அனாதை ஆனந்தன்' திரைப்படத்தில் ஒரு நடனக் காட்சி, அப்போதுதான் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்திருந்த கடற்கரைச் சாலை, இறுதியில் ரிசர்வ் வங்கிக்கு எதிரான 'சாதனை' சுரங்கப் பாலத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். பாடல் / நடனக் காட்சியின் பெரும் பகுதி அந்தப் பாலத்திலேயே காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

அதன் தொடர்ச்சியாகக் காட்சி நகர்ந்து தீவுத் திடலை அணுகும். தீவுத் திடலில் நிறுத்தப்பட்டிருக்கும் குடியரசு தின ஊர்வல அரசு சாதனை விளக்க அலங்கார ஊர்தியொன்று, முன்களத்தில் இருக்க, அதைக் கடந்து நகரும் கேமரா, ஊர்தியில் உள்ள '1972 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்படும் - தமிழ்நாடு மின்சார வாரியம்' என்ற வாசகத்தைப் போகிற போக்கில் காட்சிப்படுத்தியிருக்கும். ஆனால், கவனத்தை ஈர்க்கும் அக்கறையோடு. இயக்குநர்கள் கிருஷ்ணன் - பஞ்சு ஆயிற்றே. நடனத்தின் அடுத்தப் பகுதியில் மெரினா கடற்கரை அருகில் கட்டி முடிக்கப்பட்டும், கட்டப்பட்டும் வரும் குடிசைமாற்று வாரிய கட்டடங்களைப் பின்புலமாகக் கொண்டிருக்கும்.

இந்த ரீதியிலான தடய சாட்சியங்களைக் கண்டடைவது மட்டும் ஆய்வை நிறைவு செய்யாது. 'திராவிட மாடல்' ஆட்சியால் விளைந்த சமூக மாற்ற விளைவுகளையும் திரைப்படங்களில் கண்டடைய முயற்சிக்கலாம்.

...படம் விரியும்

## ஸ்ரீபதியின் வெற்றி, சமூகநீதியின் வெற்றி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீபதி, 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். பழங்குடியினர் பிரிவில் முதல் பெண் உரிமையியல் நீதிபதி எனப் பெயர் எடுத்துள்ளவருக்குப் பின்னால் பெரும் போராட்டம் உள்ளது. ஜவ்வாது மலையில் பிறந்து, ஏலகிரி மலையில் கல்வி கற்று, சட்டப்படிப்பை முடித்து, படிப்பின் இடையில் மணமானாலும் இடைநின்று போகாமல் படித்து முடித்துள்ளார்.

குறிப்பாக, ஸ்ரீபதிக்குத் தேர்வு வரும் தேதியிலேயேதான் பிரசவத் தேதியும் கொடுக்கப்பட்டிருந்தது. தேர்வுக்கு இரண்டு நாட்களுக்கு முன் குழந்தையும் பிறந்துவிட்டது. தேர்வைக் கண்டிப்பாக எழுதவேண்டும் என்று தீவிரமாக இருந்தவர், மருத்துவரின் ஆலோசனையுடன் பல பாதுகாப்புகளுடன் வந்து தேர்வு எழுதி இருக்கிறார்.

ஸ்ரீபதியின் வெற்றிக்குப் பின்னால், அவரது தாய், கணவர், குடும்பத்தினர் எனப் பக்கபலமாக இருந்தாலும், நமது திராவிட மாடல் அரசு தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை எனக் கொண்டு வந்த அரசாணையின் வழியே ஸ்ரீபதி நீதிபதியாகத் தேர்வாகியுள்ளார்.

இந்த வெற்றியினைப் பாராட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், பெரிய வசதிகள் இல்லாத மலைக்கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் ஒருவர் இளம் வயதில் இந்நிலையை எட்டியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். "சமூகநீதி என்ற சொல்லை உச்சரிக்கக் கூட மனமில்லாமல் தமிழ்நாட்டில் வளைய வரும் சிலருக்கு ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் தமிழ்நாடு தரும் பதில்!" என முதலமைச்சர் கூறியுள்ள வரிகள், அரசியல் அர்த்தம் பொதிந்தவை. அந்த அரசியல், மேலும் பல வெற்றிகளைச் சாத்தியமாக்கும்.

## ஃப்ளாஷ்பேக்





சிவகுமார்

### செயல்வீரர்களும் தேர்தலும்!

1998-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை முன்னிட்டு இளைஞர் அணி தம்பிமார்களைத் தேர்தலுக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு முழுவதும் செயல்வீரர் கூட்டத்துடன் தேர்தல் பிரச்சாரமும் மேற்கொண்டார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள். அப்போது ஒருங்கிணைந்த கன்னியாகுமரி மாவட்ட ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், தளபதி அவர்களுக்கு சால்வை அணிவித்து மகிழ்ந்தேன்.

**-கே.சிவகுமார்,**
**மாநகரப் பிரதிநிதி,**
**கன்னியாகுமரி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### தி.மு.க.வின் முதல் விருது!

**1956-ஆம் ஆண்டு தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாடு, திருச்சியில் நடைபெற்றது. தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்ட திராவிட இயக்க வீராங்கனை மூவலூர் ராமாமிர்தம் அம்மையாருக்கு, அந்த மாநாட்டில் விருது வழங்கி, கவுரவித்தார் பேரறிஞர் அண்ணா. தி.மு.க.வின் முதல் விருதைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றார் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 390




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.